


கீதாசார்யன்

# கீதாசார்யன்-27



தொகுதி 3 | ரௌத்ரி ௵ | மார்கழி ௴ | டிச 80 | பகுதி 3



ஆசிரியர் :

M. A. வேங்கடகிருஷ்ணன், M.A., M.Phil.

**இயக்குநர் குழு :**

**P. T. சுந்தரவரதன்**
நிதி இயக்குநர்

**N. கணபதி**
விற்பனை இயக்குநர்

**R. ரவிச்சந்திரன்**
பொதுத் தொடர்பு இயக்குநர்

**P. T. ஸ்ரீனிவாசன்**
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு :**

சாண்டில்யன் (தலைவர்)
K. R. ஸ்ரீனிவாஸாசாரியர்
Dr. V. V. ராமாநுஜம்
S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார்
K. E. B. ரங்கராஜன்

7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

★

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா ரூ. 12/-

# ஸ்ரீமத் பகவத் கீதை

## இரண்டாம் அத்யாயம்

''யம்ஹி நவ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ப
ஸமதுக்கஸுகம் திரம் ஸோSம்ருதத்வாய கல்பதே'' (15)

ஆண்களிற் சிறந்தவனே! துன்பத்தையும் இன்பம் போல எண்ணுகின்றவனும், தைரியமுடையவனுமாயிருக்கிற எந்த புருஷனை இந்த சுகதுக்கங்கள் கலங்கப்பண்ண மாட்டாவோ அத்தகைய அவனே வீடு பேற்றினைப் பெறுவான்.

முன் சுலோகத்தில் சுகதுக்கங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறியதனால் ''இவற்றைப் பொறுத்துக் கொள்வது எதற்கு?'' என்ற வினா உண்டாயிற்று அதற்கு விடையாக இந்த சுலோகம் அமைந்துள்ளது

உலகத்தில் யாவரும் இன்பத்தை விரும்புவார்; துன்பத்தைத் தவிருவார். போரினை நிறுத்திவிட்டால், அம்பு விழுதலாலுண்டாகும் துன்பம் நீங்கிவிடலாம், ஆதலால் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டுவது எதற்காக? என்பது அர்ச்சுனனுடைய கேள்வியாகும்.

யாகம் தவம் முதலியவற்றைத் தொடங்கிச் செய்யுங் காலத்தில் பசி குளிர் முதலியவற்றாலுண்டாகும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு அவற்றைச் செய்யுமாறு போல இந்தப் போரினைத் தொடங்கிச் செய்யுங்காலத்திலும் அம்புகள் படுதலாலுண்டாகும் துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு பலனைக் கருதாமல் உனக்குரிய அறம் என்று நினைத்துச் செய்வாயாயின் நீ வீடுபேற்றினைப் பெறுவாய் என்பது கண்ணபிரானுடைய விடையாகும்.

ஆரோக்யத்தை விரும்புகின்றவன் மருந்தை உட்கொள்வதானால் உண்டாகும் துன்பத்தை இன்ப சாதனமாக எண்ணுவதால் அது அவனுக்குத் துன்பமாகத் தோன்றுவதில்லை. அது போலவே வீடு பேற்றினை விரும்புகின்ற நீ அவ்வின்ப சாதனமான இந்தப் போரினால் உண்டாகும் துன்பத்தையும் இன்பமாகக் கருதலாம் என்பது கண்ணபிரான் கருத்தாகும். ★

# உலகத்தமிழ் மாநாட்டில் உரிய இடம் தரப்படுமா?

சங்ககாலத்தில் உன்னத நிலையிலிருந்த தமிழ்மொழி இடையில் சிலகாலம் வளர்ச்சி குன்றி இருந்தபோது அதை மீண்டும் உன்னத நிலைக்குக் கொண்டு வந்தது வைணவமும் சைவமுமே என்று சரித்திரம் பகர்கிறது.

குறிப்பாக வைணவம், ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப் பிரபந்தங்களை 'திராவிட வேதம்' என்று அங்கீகரித்து வேதங்களுக்குச் சமமான இடத்தை அளித்து மக்களுடைய சமூக வாழ்க்கையிலும், மதவாழ்க்கையிலும் ஈடுபடுத்தி ஒரு மறு மலர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால் தற்காலத்தில் தமிழ் வளர்ச்சியில் வைணவம் ஆற்றியுள்ள பங்கைக் கருத்தில் கொள்ளாமல் புறக்கணித்து வருவது வருந்தத்தக்கது. சென்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடந்தபோதும் ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களுக்கோ, மற்ற வைணவ இலக்கியங்களுக்கோ அதிக முக்யத்வம் அளிக்கப்படவில்லை.

இமயமலைச் சாரலில் பதரிகாச்ரமம் முதல் கன்யாகுமரி வரை திவ்யபபிரபந்தம் ஒவ்வொரு திவ்யதேசத்திலும் அனுஸந்திக்கப்பட்டும், ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனுடைய இதயத்திலும் குடிகொண்டுமிருப்பதால் மாநாடுகளில் புறக்கணிக்கப்படுவதால் திவ்யப்பிரபந்தத்திற்கு ஒரு குறைவும் ஏற்படப் போவதில்லை. ஆயினும் மேற்கூறிய காரணங்களுக்காகவே—உலகெங்கும் தமிழை வாழச் செய்து கொண்டிருக்கும் திவ்யப்பிரபந்தத்தின்

பெருமைகளைப் பேசுவதன் மூலம் மாநாட்டிற்கே பெருமை சேரும்.

இப்போது ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மாநகரில் நடக்கவிருக்கிறது.

'வேதத்திற்கு ஓம் என்னுமதுபோல் கோதிலவாம் ஆழ்வார் கள் கூறு கலைகட்கெல்லாம் ஆதியாயமைந்த திருப்பல்லாண்டு அவதரித்த இடம் மதுரைமாநகர்.

சங்கப்புலவர்கள் நம்மாழ்வாருடைய பிரபந்தத்தினை ஒப்புக் கொள்ள மறுத்த போது மதுரகவிகள் ''கண்ணன் கழலிணை'' எனும் பாசுரத்தை சங்கப் பலகையில் வைக்க, மற்ற நூல்களைத் தள்ளி நம்மாழ்வாருடைய அப்பாசுரத்தை மட்டுமே கரைசேர்த்த இடம் மதுரை.

அப்படிப்பட்ட கூடல்மாநகரில் கூடும் மாநாட்டிலாவது வைணவத்திற்கு உரிய இடம் அளிக்கப்படவேண்டாமா? அதற் கான முழுமுயற்சிகளையும் வைணவசமயப் பெரியார்களும், பேராசிரியர்களும் எடுத்துக்கொள்ள வேண்டும்; அரசாங்கத் திற்கு எடுத்துச்சொல்ல வேண்டும். உலகத்தமிழ் மாநாட்டிலே வைணவம் உ(ய)ரிய இடத்தைப் பெறச் செய்யவேண்டும்.

———

# இராமாயணச்

# சுவையமுதம்

நம்முடைய பூர்வாசாரியர்கள் அநுபவித்தருளின இதிஹாஸ புராணங்களில் ஸ்ரீராமாயணமொன்றே தலைமை பெற்றிருக்கும். இதைத்தான் இதிஹாஸச்ரேஷ்டமென்று வ்யபதேசித்தருளினார்கள். பகவத் விஷயாதிகளிலும் மிக மிக வெடுத்துக் கையாள்வதும் வியாக்கியானிப்பதும் ஸ்ரீராமாயணமே. இதற்கடுத்தபடியாக ஸ்ரீவிஷ்ணு புராணம். அதற்கடுத்தபடியாக பகவத் கீதை. அவையிரண்டையும்விட ஸ்ரீராமாயணத்திற்கே ப்ராபல்யமென்பது புநருக்தம். ஸ்ரீராமாயணத்திலிருந்து நம் ஆசாரியர்கள் நாலாயிர திவ்ய

**ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம்**

## அண்ணங்கராசாரியர்ஸ்வாமி

ப்ரபந்த வியாக்கியானங்களில் பெரியவாச்சான் பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையும் ஒரோவிடங்களில் வியாக்கியானித்தருளியிருப்பவற்றைத் திரட்டி ஸ்ரீராமாயண ஸௌரபமென்று பலவாண்டுகட்கு முன்பு வெளியிட்டிருக்கிறேன். இப்போது சேகரிக்கப்படுகிற இந்த நூலின் ப்ரமேயமென்னவென்றால், இன்சுவையே வடிவெடுத்த ஸ்ரீராமாயணத்தை ஆங்காங்கு உபந்யஸிப்பவர்களுக்கும் உபந்யஸிக்க விரும்புமவர்களுக்கும் உபகாரமாக ஸ்ரீராமாயண ச்லோக ரத்னங்கள் பலவற்றுக்கும் இன்சுவைப் பொருள்களை உபஹரிப்பதேயாம். அப்பொருள்கள் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளின் மணித்திரள்களேயாம்.

ஸ்ரீராமாயணத்தின் ஆரம்பம் வால்மீகி நாரத ஸம்வாதமாக நிகழ்ந்திருக்கின்றது. அதாவது வான்மீகி முனிவர் நாரத மஹர்ஷியைக் கேட்பதாகவும் அவர் விடை கூறுவதாகவும்

தோன்றியிருக்கின்றது. ஸ்ரீவிஷ்ணுபுராணம் மைத்ரேய பராசர ஸம்வாதமாக அவதரித்தது. ஆனால் அதன் அவதார க்ரமத்திலும் இதன் அவதாரக்ரமத்திலும் வாசியுள்ளது. பராசர பகவான் அநுஷ்டானத்தை முடித்துக் கொண்டு ஸ்வாச்ரமத்தில் வீற்றிருக்க, அங்கே மைத்ரேயர் சென்று ஸ்வரூபாநுரூபமாகத் தெண்டனிட்டு ப்ரச்னம் பண்ணினதாக அங்குள்ளது. இங்கு "நாரதம் பரிபப்ரச்ச வால்மீகி," என்றிவ்வளவே உள்ளது. வான்மீகி முனிவரின் ஆச்ரமத்தை நோக்கி தேவலோக மஹர்ஷியாகிய நாரத பகவான் எழுந்தருளினதாகவும் அவரை நோக்கி வான்மீகி பதினாறு கேள்விகள் கேட்டதாகவும் அவற்றுக்கு நாரதர் விடை கூறும் முகத்தால் ஸ்ரீராம கதைகளை ஒருவாறு கூறித் தலைக்கட்டுவதாகவும் அமைந்துள்ளது.

அநவரதமும் ராம ராமேதி கூஜநம் செய்து போது போக்கும் வால்மீகி கோகிலத்திற்கு ஸ்ரீராம கதையையே கேட்க விருப்பமிருந்தும், தம்மிட மெழுந்தருளின நாரத முனிவரை நோக்கி ராமகதையைச் செவிகுளிரக் கேட்க விரும்பியிருக்குமெனக்கு அதனைச் சொல்லுமையா! என்று ருஜுவாகக் கேட்கலாமாயிருக்க, அங்ஙனம் கேளாமே சில குணவிசேஷங்களைச் சொல்லி இவற்றையுடையவன் யாவனோ அவனைச் சொல்லுமென்று கேட்டது எதற்காகவென்னில்; இத்தகைய திருக்குணங்களையுடையவர் சக்ரவர்த்தி திருமகனொருவரேயன்றி மற்றெவருமல்லர் என்கிற வுறுதி வான்மீகி தமக்கு உள்ளது. அது, ப்ரஹ்மவித்துக்களில் தலைவரான நாரத மஹரிஷியின் உக்தியாலும் ஊர்ஜிதமாக வேணுமென்ற அபிநிவேசத்தினாலேதான். இராமபிரானுடைய பெருமையைச் சொல்லுமென்று வினவி அதை அவர் சொல்லக் கேட்பதிலுங் காட்டில் ஸாமாந்யமாக ப்ரச்னம் பண்ணி விசேஷமாகச் சொல்லக் கேட்பது ரஸவத்தரமன்றோ?

எம்பெருமானுடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர்களில் எவர் பெரும் புகழானரோ அவரைச் சொல்லும் என்று வின

வினவளவிலே, வினவப்பட்டவர் ''கூரத்தாழ்வானொருவரே அத்தகைய பெரும் புகழாளர்'' என்று விவரித்துரைத்தால் அது ரஸவத்தரமாகுமே யல்லது, கூரத்தாழ்வானுடைய பெருமையைச் சொல்லுமென்று அபேக்ஷித்து அதையொருவர் சொல்லக் கேட்பதில் சிறப்பில்லையன்றோ. ஆ:, ஸ்ரீராம கதையைக் கேட்கக் குதூஹலங் கொண்டிருந்த வான்மீகி முனிவர் மறைத்துக் கேட்டது ஆர்ஜவக் குறையின்றென்று நினைக்கவும் தகாது; தமது உறுதியை நிலைநாட்டிக் கொள்ளவேயாம்.

[தபஸ் ஸ்வாத்யாயநிரதம் தபஸ்வி வாக்விதாம் வரம் நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முநிபுங்கவம்]. இது வால்மீகி யல்லாது வேறொருவர் பணித்ததுபோல் தோன்ற நின்றும் வால்மீகி பணித்ததே. **''நாரதம் முநிபுங்கவம் வால்மீகி ரஹம் பர்யப்ருச்சம்''** என்று சுலோகமியற்றியிருக்கலாமே யென்னில், அது லௌகிக கோஷ்டிகளில் பரிமாறும் முறை; இது மஹர்ஷி கோஷ்டிகளில் பரிமாறும் முறை என்று கொள்க. இங்கு வால்மீகி தமக்கு **தபஸ்வீ** என்று விசேஷணமிட்டுக் கொண்டது தம்மைத் தபோநிஷ்டராகச் சொல்லிக் கொள்ள விரும்பி யன்று; **தபஸ்வீ** தாபஸச் **சோச்ய:** என்கிற நிகண்டுவின்படி 'நிர்வேதமுடையவர்' என்கிற பொருளை விரும்பியாம்.

நைஷத காவியத்தில், நளமஹாராஜனால் பிடியுண்ட ஹம்ஸம் தன்னை விட்டுவிடுமாறு வேண்டிக் கொள்ளுகையில் அவ்வரசன் மனத்தில் இரக்கம் பிறக்குமாறு சொல்லு மடைவிலே ''மதேக புத்ரா ஜநநீ ஜராதுரா நவப்ரஸூதிர் வரடா தபஸ்விநீ'' என்றது; இங்கு (தபஸ்விநீ) என்றது தபஸ்வீ என்பதன் ஸ்த்ரீலிங்க ரூபம். இத்தால் சோசநீயார்த்தே லோகப்ரயோகமுமுண்டென்று காட்டினபடி. அது நிற்க. ஆசார்யோபஸத்தி பண்ண விரும்புமவனுக்கு நிர்வேதமே முக்கியம் என்னுமிடத்தை *பரீக்ஷ்ய லோகாந் கர்ம சிதாந்

ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்* என்கிற சுருதியும் ஓதிற்று. "சுகஸ்ய ததநாதரச்ரவணாத் ததாத்ரவணாத் ஸூச்யதே ஹி" என்கிற ப்ரஹ்மஸூத்ரமும் காட்டிற்று. ப்ரக்ருதத்தில் வாள்மீகிக்கு எவ்விதமான நிர்வேதமென்னில், ஆசார்யன் முகமாகக் கேட்டாலன்றி வித்யை ப்ரதிஷ்டிதமாகா தென்கிற சாஸ்த்ரார்த்தத்தைத் தாம் உணர்ந்தவராகையாலே அப்படி உபதேசிக்கவல்ல ஆசார்யரொருவர் நேர்படவில்லையே! என்றிருந்த நிர்வேதமேயாயிற்று. சொல்லுகிற ஆசாரியர் தம்முடைய வாக்கு வல்லமையினாலே சடக்கெனச் சொல்லிவிடுவதில் ரஸமில்லை; விவக்ஷிதமான விஷயத்தை மனனம் பண்ணிப்பண்ணித் தாமநுபவித்து உருகுந் தன்மையுமிருக்க வேணு மென்பதைக் காட்டவே நாரதமஹர்ஷிக்கு வாக்விதாம் வரம் என்றும் முநிபுங்கவம் என்றும் இரண்டு விசேஷணங்களிடப்பட்டன. (தொடரும்)

Cable : BAYAUNT

Tel { Off : 28891
Res : 34227

# WORLD WIDE EXPORTERS

*Delers in :*

HANDLOOM GOODS MANUFACTURERS
EXPORTERS & IMPORTERS

*Benkers :*

**STATE BANK OF INDIA**
**Overse Branch**
**MADRAS-600 001.**

**21, MINT STREET**
**MADRAS-600 001.**
(S. INDIA)

# திருவயிந்திரபுரம்

**திருவயிந்திரபுரம் :** ஆயிரமாறுகளும் சுனைகள் பலாயிரமும், ஆயிரக் கணக்கான மலைகளையும் கொண்டது நம் பாரத நாடு. இவற்றுள் இரண்டு மலைகளுக்குத் தனிப் பெருமையுண்டு. பகவானே ஒரு மலையாக ஆகியுள்ளான். அவனை விட்டுப் பிரியாமல் அடிமை செய்யும் ஆதிசேஷன் ஒரு மலையாகத் தோன்றியுள்ளான். பகவானே கோவர்த்தன மலையாக இருக்கிறான். ஆயர்கள் செய்த பூஜையைத் தானே கோவர்த்தன மலையாக இருந்து ஏற்றிருக்கிறான். திருவேங்கட

## ஸ்தலசயனத்துறைவார்

முடையான் (ஸ்ரீநிவாஸன்) எழுந்தருளியுள்ள திருப்பதி மலை 'சேஷாத்ரி' எனப்படுகிறது. ஆதிசேஷனே திருமலையாக இருக்கிறார் என்பது பெரியோர்களின் துணிவு. ஆதிசேஷன் பெயரால் ஏற்பட்ட நகரமே திருவயிந்திரபுரம். அஹீந்தரபுரம் என்ற சொல்லே 'அயிந்திரபுரம்' என்று மாறி 'அயிந்தை' என்றும் மருவியது.

**மலையைக் கொண்டு வந்த மாருதி :—** இவ்வூரிலுள்ள மலைக்கு 'ஒளஷதாத்ரி' என்று பெயர். ஸஞ்சீவி மலை என்றும் பெயருண்டு. இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போரில் ஒரு சமயம் அரக்கர்களால் வானரங்களின் படை வீழ்த்தப்பட்டது. இந்நிலையைக் கண்ட வாயுபுத்திரனான அனுமன் வான் வழியே விரைந்து சென்று ஸஞ்சீவி மலையைப் பெயர்த்து எடுத்து வந்தார் மலைக் காற்று பட்டவுடன் குரக்கினங்கள் உயிர் பெற்று எழுந்தன. இதுபோல் முன்

ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் நடைபெற்றது. இப்போரில் தேவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டார்கள். அனுமான் ஸஞ்ஜீவி மலையின் ஒரு கொடு முடியைக் கொண்டு வந்து தேவர்களைக் காப்பாற்றினர் என்று கூறப்படுகிறது. 'இம்மலை தன்னுடையது' என்று இன்றும் உரிமை கொண்டாடுவதுபோல் இம்மலையடிவாரத்தில் திருவடி (ஹநுமான்) எழுந்தருளி இருக்கிறார். நம் வேதாந்தாசாரியருக்கு (வேதாந்ததேசிகருக்கு) கருடன் ஸேவை ஸாதித்து ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்து ஹயக்ரீவ விக்ரஹத்தையும் கொடுத்தது இம்மலையில்தான் என்றும் கூறப்படுகிறது.

**பரிமுகனார் செய்த பேருதவி :** பகவான் பல அவதாரங்களை மேற்கொண்டுள்ளான். அவற்றுள் ஒன்று ஹயக்ரீவ அவதாரம். (மனித உடலும் குதிரை முகமும் கொண்டு கழுத்துக்கு மேலே ஒருபடியும் கழுத்துக்குக் கீழே ஒரு விதமாகவும் எடுத்த அவதாரம்). அரிமுகனும் பரிமுகனும் ஒருவனே.

ஒரு காலத்தில் மதுகைடபர்கள் (அசுரர்கள்) வரவலிமையால் செருக்குண்டு பிரம்மாவை எதிர்த்தனர். வேதங்களை அபஹரித்துத் தம் மாயையினால் அவற்றையெல்லாம் சேர்த்து பெண் குதிரை வடிவமாக்கிப் பாதாளத்தில் ஓரிடத்தில் மறைத்து வைத்தனர். பிரம்மா ஸ்ரீமந்நாராயணனை அடைந்து உதவ வேண்டினார். எம்பெருமான் மதுகைடபர்களைத் தேடிப் பிடித்து அழித்தான், ஹயக்ரீவனாக ஆனார். பெண் குதிரையாக இருந்த மறையாய நால் வேதங்களையும் மீட்டுப் பிரமாவிற்கு அளித்தார், திருமகள் குதிரையின் முகத்தில் வசிப்பதாக நூல்கள் கூறுகின்றன. கலைமகளும் ஹயக்ரீவனை வணங்கி வழிபட்டே கல்விக் கடவுளானாள்.

**தாகத்தைத் தீர்த்த அனந்தன் :** பாற்கடலில் பள்ளி கொண்ட பரமன் இவ்வூரிலுள்ள மலையில் வந்து தங்கிக் கலைப் பாறிக் கொண்டிருந்தார். அவருக்குத் தாகம் ஏற்பட்டது.

அருகிலிருந்தவர்களிடம் தெரிவித்தார். நீர் நிலைகள் அங்கு இல்லாததால் தீர்த்தம் (தண்ணீர்) கொண்டுவருமாறு கருடனுக்கு ஆணையிட்டார். கருடன் சென்று வெகுநேரமாயிற்று; வந்து சேரவில்லை. திருவனந்தாழ்வானுக்குக் கட்டளை இட்டார். அவர் உடனே பூமியைத் தன் வாலால் ஓங்கியடித்தார். பூமி பிளந்தது. பூமிக்குள்ளிருந்து தண்ணீர் மேலே வந்தது. அதைக் கொண்டு கொடுத்துப் பகவானின் தாகத்தைத் தீர்த்தார். பகவானும் தண்ணீர் தோன்றிய நீர் நிலையைக் கண்டு 'சேஷதீர்த்தம்' என்று பெயரிட்டான்.

கருடன் மிகவும் அவசரமாக வந்து "தங்களின் தாகத்தைத் தணிக்க முனிவரின் அருளால் ஒரு நதியையே அழைத்து வந்திருக்கிறேன்; சிறிது தாமதமாகிவிட்டது" என்றார். பகவான் கருடனுக்கு ஆறுதல் கூறி அதற்குக் 'கருட நதி' என்று பெயரிட்டதாகப் புராணம் கூறுகிறது. நாளடைவில் கருட நதியே 'கெடிலம் நதி' என்று வழக்கில் வந்துவிட்டது.

இவ்வூரிலுள்ள ஸன்னிதியின் வாசலில் கடிலம் நதியும், ஸன்னிதியின் பிராகாரத்தில் சேஷ தீர்த்தம் கிணறு வடிவிலும் இருக்கின்றன. இவ்விரண்டு தீர்த்தங்களையே தேவநாதன் விரும்பி ஏற்கிறான். இவ்விரண்டினைத் தவிர பிரம்ம தீர்த்தம், பூமி தீர்த்தம் ஆகிய இரண்டும் இவ்வூரில் சிறப்புடையனவாகும்.

**லக்ஷ்மீ கல்யாணம் !** ஒரு சமயம் பிருகு முனிவர் இவ்வூரிலுள்ள மலையில் தவம் செய்தார். பூமி தீர்த்தம் என்ற குளத்தையும் தோற்றுவித்தார். ஒரே ஒரு நாள் அக்குளத்தில் ஆயிரம் இதழ் கொண்ட பொற்றாமரையைக் கண்டார். அம்மலரில் அழகிய பெண் குழந்தை ஒன்று இருந்தது. நிதி கிடைத்ததாக எண்ணி முனிவர் அக்குழந்தையை எடுத்து வளர்த்தார். அவளுக்குப் பொற்றாமரையாள் என்று பெயரிட்டார். அவளும் வளர்ந்து பகவானையே நாயகனாக அடைய வேண்டும்' என்று தவம் புரிந்தாள். எம்பெருமானும் திருவுள்ளம் உவந்தான். முனிவரும் தன் மகளைப் பகவானுக்கு

கன்னிகா தானம் செய்து கொடுத்தார். எம்பெருமானும் பொற்றாமரையாள் கேள்வனானான். அவன் முனிவரைத் தன் அருகிலேயே இருக்கச் செய்தான். அதிலிருந்து தேவநாதனின் திவ்ய மஹிஷி ஹேமாப்ஜ நாயகி, செங்கமல நாயகி என்றும் அழைக்கப்படுகிறாள்.

அவ்வூரில் திருவனந்தாழ்வானின் அபராவதாரமாகிய நம் மணவாளமாமுனிகள் தம் பிறந்த நாளைத் தேவநாதனின் திருவடி வாரத்தில் நித்ய ஸ்ரீர் நித்யமங்களமாகக் கொண்டாடி வருகிறார்.

எங்கள் குலதெய்வமே! பகவானை ஸேவிக்கப் போகிறோம். என்று உள்ளம் மகிழவேண்டும். கன்று தாய்ப் பசுவை நாடிச் செல்வதுபோல் பேரார்வத்துடன் அவனிடம் செல்ல வேண்டும். தேவர்களுக்குத் தலைவனான அவனே நமக்கும் தலைவன் என்று நினைக்க வேண்டும். அப்போதலர்ந்த மலர்களை அவனது திருவடிகளில் சேர்த்து அவனை வணங்க வேண்டும். பணிவே அவனருளை நமக்குப் பெற்றுத்தருகிறது. பணிவு உயர்நிலையை அடைவிக்கிறது. ஒரு அன்பர் இவ்வாறு தேவநாதனை வணங்குவதைத் தேவர்கள் மறைந்திருந்து காண்கிறார்கள். தேவநாதன் அவ்வடியார் சொற்படி நடந்து கொள்கிறான்; பலவரங்களை அருளுகிறான். அடியவர்க்கு மெய்யனாக இருக்கிறான். இதைக் கண்ட தேவர்கள், தேவநாதனுக்காகக் கொண்டு வந்த மலர்களால் இவ்வடியாரைப் பூசிக்கிறார்கள். தேவநாதனின் திருவருளைப் பெற்ற தேவரீரே எங்களுக்குத் தலைவர், எங்கள் குலதெய்வம் என்று கொண்டாடுகிறார்கள். தேவநாதனின் பெருமைகளை யாரால் கூறமுடியும்? என்கிறார் பிள்ளைப் பெருமான் ஐயங்கார்.

அன்பணிந்த சிந்தையராய் ஆய்ந்தமலர் தூவி
முன்பணிந்து நீரெமக்கு மூர்த்தியரே—என்பர்
எமையிந்திர புரத்தார்க்கு இன்தொண்டரானார்
தமையிந்திர புரத்தார் தாம்

★

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## 5. முதல் போர்

ஆரியப் பட்டாள் வடக்கு வாயிலில் ஒரே அல்லோல கல்லோலப் பட்டது. டில்லிப் படைகள் நெருக்கி அடித்துக் கொண்டு அதன் முன்னால் குவிந்து கொண்டு இருந்தன.

வாயில் முன்னால் உள்ள திறந்த வெளியில் பரவியதும் அல்லாமல், நான்காவது திருச்சுவரின் இரு புறங்களிலும் மெதுவாகப் பரவ ஆரம்பித்தன.

பரவிய படைகள் சிறிது நேரத்தில் மேலே செல்லாமல் அப்படியே நின்று விட்டன.

வாயில் கோபுரத்தின் முதல் தளத்தில் மறைந்திருந்த பஞ்சு கொண்டான் அதன் துவாரத்தின் வழியாக எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்தார்.

இனி என்ன நடக்கப் போகிறது என்று அவர் யோசித்த போது பத்து வீரர்கள் குதிரை மீதேறி வடக்கு வாயில் அருகே வந்தார்கள்.

வாயில் முன்னால் நின்று கொண்டு மேலே யாராவது தெரிகிறார்களா என்று மூன்றாவது திருச்சுற்றின் அரணை நெடுநேரம் அவர்கள் பார்த்தார்கள்.

யாரும் தென்படாமல் போகவே அதில் நடுவனான ஒருவன் கைகளைக் குவித்து, ''ஹோ; ஹோ!'' என்று இரைந்து கத்தினான்.

பஞ்சு கொண்டான் அசைய வில்லை.

"ஹோ! ஹோ! அரண் மீது யாராயிருந்தாலும் வெளியே வருக! வருக! வருக!" என்று மீண்டும் கத்தினான் அவன்.

துவாரத்தின் இருள் பகுதியிலிருந்து அதைக் கவனித்த பஞ்சு கொண்டான் மற்ற வீரர்களுக்கு கண் காட்டி விட்டுச் சாரத்தில் இறங்கி, பிறகு மதில் மேல் அதி கப்பீரத்துடனே வந்து நின்றார்.

அவரைக் கண்டதும் கீழே இருந்த தலைவன் அருகிலுள்ள தடுவனிடம் ஏதோ கூற, அதைத் தமிழில் அவனும் மாற்றி இரைந்து கத்தினான்.

"காகதீய அரசர் பிரதாப ருத்திரரை வென்று வாகை சூடி இப்போது மாபாருக்கு வந்திருக்கின்றன, அரசர்க்கரசரான டில்லி சுல்தானின் வீரப்படைகள்! அவைகளுக்குப் பணிந்து அரணுக்குள் இருக்கும் சகலமான பொருள்களையும் தந்துவிட வேண்டியது. இது எம் வீரதளபதி உலுக்கான் அவர்களின் கட்டளை" என்று கத்தினான்.

உடனே பஞ்சு கொண்டான் சிலிர்த்துக் கொண்டு அவர்களை நோக்கினார்.

"அரசர்களுக்கும் அரசர், சக்கரவர்த்திகளுக்கும் சக்கரவர்த்தி! எண் திசையும் ஏழ் உலகுக்குமே மாமன்னர்! அண்ட சராசரங்களுக்குமே அதிபதி! அந்த ராஜாதி ராஜரான திருவரங்க ராஜனின் திருவருள் பீக்க சமஸ்தானம் இது. அவரிடம் கப்பம் வாங்குவதற்கு யாருக்கும் என்றைக்குமே உரிமை கிடையாது இதை உம் தளபதியிடம் கூறலாம்" என்று வெகு அழுத்தமாகக் கூறினார்.

பிறகு ஒரு குதிரை வீரன் மட்டும் முன்னால் நகர்ந்து வந்து தனது வில்லை வளைத்து ஒன்றன் பின் ஒன்றாக மூன்று அம்புகளை ஆகாயம் நோக்கிப் பறக்க விட்டான்.

பிறகு அவன் ஆவலுடன் கோபுர வாயிலை நோக்கித் திரும்பினன்.

அடுத்த சில கணங்களுக்குப் பிறகு, கோபுர உச்சிக்கு மேலே ஒன்றன் பின் ஒன்ருக மூன்று அம்புகள் ஆகாயம் நோக்கிப் பரந்து சென்றன.

போர் ஆரம்பிக்கலாம் என்பதற்கான அறிகுறி அது.

அடுத்த கணம் பேரோசை எழுப்பியவாறு டில்லிப் படைகளின் நகராக்கள் முழங்க ஆரம்பித்தன. எக்காளங்கள் அலறின.

அந்த ஓசைகள் அந்தப் பிரதேசம் முழுவதையுமே நடுங்க வைத்தன செவிகளைப் பிளக்கும்படியாகப் பேரோசைகளை எழுப்பிக் கொண்டு டில்லிக் குதிரைப் படைகள் ஆரிய பட்டான் தெற்கு வாயிலுக்கு முன்னல் வந்தன. பிறகு அவை இரண்டு கூறுகளாகப் பிரிந்து நான்காவது திருச்சுற்றின் மேற்குச் சரகிலும் கிழக்குச் சரகிலும் நகரலாயின.

ஒவ்வொரு அடிக்கும், மேலே அரண் விளிம்புகளை நோக்கி ஒரு சாரி அம்புகளைப் பாய்ச்சிக் கொண்டே அவர்கள் முன் நகர்ந்தார்கள்.

அதற்கு அடுத்தாற்போல் நிறைய வீரர்கள் தங்கள் கைகளில் உயரமான ஏணிகளை வைத்துக் கொண்டு ஆயத்தமாகக் காத்துக் கிடந்தார்கள். கோட்டையின் எதிர்ப்புக் குறைந்தவுடன் அதன் மீது ஏறுவதற்கு அந்த அணியினர் சித்தமாக இருந்தார்கள்.

கோபுரத்தின் மேலே இருந்து கொண்டு படைகள் நகர்வதை எல்லாம் உன்னிப்புடன் கவனித்து வந்த பஞ்சு கொண்டான், எந்தவித மறு நடவடிக்கையும் எடுக்காமல் பேசாமல் இருந்தார். ஆனல் அவர் ஏதோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருப்பது மட்டும் மற்றவர்களுக்குப் புலனகியது.

படைகள் ஒரு குறியிட்ட தூரம் வரை சென்று, இரு சரகிலும் அடைத்துக் கொண்ட பிறகு, அவர் திடீரென்று கையைத் தூக்கி சமிக்ஞை செய்தார்.

மறுகணம் கோபுரத் துவாரத்திலிருந்த ஒருவன் கருடக் கொடியைத் தூக்கி விரைவாக அசைக்கவே கோபுரத்திலிருந்தும், மதிலுக்குள் மறைந்திருந்த பரண்களிலிருந்தும் நூற்றுக் கணக்கான அம்புகள் கீழே எதிரிப் படை நோக்கிப் பாய்ந்து சென்றன.

அதே கணத்தில் மதிலுக்குள்ளிருந்த திருச் சுற்றிலிருந்து எரி உருண்டைகளுடன் கூடிய அம்புகள் விர்ரென்று வெளி நோக்கிப் பறந்து சென்றன.

இந்த எதிர்தாக்குதலால் வேகம் தாங்காமல் குதிரை வீரர்களில் பலர் கீழே விழுந்து இறக்கலானார்கள்.

மதிலுக்குள் இருந்த வீரர்கள் இதற்குள் கொதிக்கும் எண்ணெயைக் கலயங்களில் ஊற்றி, அந்த கலயங்களை நீட்டமான மூங்கில் கொம்புகளால் தூக்கி, வடக்கு வாயில் நெரிசல் மீது விட்டெறிந்தார்கள்.

கலயங்கள் உடைந்து, பழுக்கக் காய்ச்சிய எண்ணெய் எங்கும் சிதறவே குதிரைகளும் வீரர்களும் அவை பட்ட மாத்திரத்திலேயே துடித்து கீழே விழுந்தார்கள்.

எங்கும் குழப்பமும் ஓலங்களுமே எஞ்சி நின்றன.

நூற்றுக் கணக்கானவர்கள் இறந்து கிடக்க, டில்லிப் படைகள் யாவும் நான்காவது சுற்றின் வடக்கு வாயில் வழியாகப் பின் வாங்கிச் செல்லத் தொடங்கின.

ஒரு முகூர்த்த நேரத்திற்குள் அந்த திருச்சுற்றுகளில் தோன்றிய எல்லா களேபரங்களும் அடங்கி விட்டன.

பஞ்சு கொண்டான் கோபுரத்திலிருந்து இறங்கி வந்து கீழே திருச் சுற்றில் இருந்த பரிவாரங்களுக்கு நன்றி சொல்லியும், உற்சாகப் பேச்சுப் பேசியும் ஊக்குவித்து விட்டு மீண்டும் கோபுரத்தில் ஏறிக் கொண்டார்.

ஆரிய பட்டாள் தெற்கு வாயிலில் வீர இளைஞனை அழகிய நம்பி கையைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான். மாலை மறைந்து இரவும் வந்தது.

இருட்டிய பிறகு ஒரு தனி ஆள் மெள்ள நடந்து, மதில் சுவர் வரையில் வந்தான். தெற்கு வாயில் கதவில் அவன் ஏதாவது விஷமம் பண்ணுவானோ என்று நினைத்த அழகிய நம்பி அவனைத் தாக்குவதற்கு சித்தமாக இருந்தான்.

"யாரங்கே! நான் உங்கள் நண்பன்! என் மீது நம்பிக்கை வையுங்கள்! நூலேணியைப் போடுங்கள்" என்று அந்தப் புதியவன் கீழிருந்து கத்தினான்.

அழகிய நம்பி சைகை செய்யவே நூலேணி ஒன்று கீழே தூக்கி எறியப்பட்டது. (தொடரும்)

---

குறிப்பு : சில வருடங்களுக்குமுன் நான் தினமணிக் கதிரில் எழுதிய தொடர் நாவல் திருவரங்கன் உலா' அதன் சுருக்கம் மட்டுமே இங்கு வெளியிடப் படுகிறது. விரிவான முழு நாவலும் வேண்டுவோர் பூம்புகார் பிரசுரம், சென்னை-1ல் பெறலாம். விலை ரூ. 19-00. —ஸ்ரீ. வே.




## 15. ஞானத்தில் இருவகை

உடையவரின் நியமனப்படி ஆண்டான் பஞ்சாங்கச் சுவடிகளின் ஏடுகளைப் புரட்டினார் வேகமாக. அவர் ஏடுகளைப் புரட்டிப்பார்த்த வேகம் கூட நிதானமாக எம்பெருமானாருக்குத் தோன்றியதால் "மீன சுக்ல தசமியன்றுதான் கருட சேவை வரும். எதற்கும் நீ பார்த்துவிடு" என்று இன்னொரு முறை கூறினார்.

பங்குனி மாத ஏடுகளைப் புரட்டிய ஆண்டான் "ஸ்வாமி அடியேனைப் பரீக்ஷிக்கிறமாதிரி தோன்றுகிறது. அன்றுதான் கருடசேவை" என்றார் ஆண்டான்.

எம்பெருமானார் புன்முறுவல் கொண்டார். "யார் யாரை பரீக்ஷிப்பது ஆண்டான்? சோதனை, சாதனை, தண்டனை, எல்லாவற்றுக்கும் அதிபதி ஸ்ரீயபதிதான். தேனவினா த்ருணமபி ந சலதி. அவனன்றி ஓரணுவும் அசைவதில்லை" என்று கண்களை உயர்த்தி ஆண்டானைப் பார்த்தார்.

ஆண்டானுக்கு ஸ்வாமியின் அன்றைய அருளிச் செயல்கள் மிக விசித்திரமாயிருந்தன. "ஆண்டுதோறும் கருட சேவை வருகிறது. அப்படியிருக்க இந்த ஆண்டின் கருடசேவையைப் பற்றிக் கேட்கிறீர்கள். இதென்ன அப்படி விசேஷம்? என்று டணிவுடன் கேட்டார் ஆண்டான்.

எம்பெருமானாரின் புன்னகை அதிகமாக விரிந்தது. அருள்பாலிக்கும் அவர் கண்கள் ஆண்டானை மிகவும் பரிதாபத்துடன் நோக்கின. "ஆண்டான்! என்ன கேள்வி கேட்டுவிட்டாய்?" என்றார் குரலில் அனுதாபம் தொனிக்க.

''ஏதாவது ஸ்வாமி திருவடிகளில் அபசாரத்துக்கு ஆளாகி விட்டேனு?'' ஆண்டான் கேள்வியில் அச்சம் ஒலித்தது.

''அபசாரத்துக்கு ஆளாகவில்லை ஆண்டான். அஞ்ஞானத் துக்கு ஆளாகிவிட்டாய்'' என்றுர் ஸ்வாமி ராமானுஜன்.

''அஞ்ஞானம் எனக்கு இருக்கமுடியாது'' ஆண்டான் சொல் திட்டமாக இருந்தது.

''ஏனிருக்கக் கூடாது ஆண்டான்? எனக்குக் கூட அஞ் ஞானம் இருக்கலாம். ஸர்வக்ஞன் ஒருவன்தான்'' என்றுர் ஸ்வாமி.

ஆண்டான் இப்முறை புன்முறுவல் கொண்டார். ''ஸ்வாமி ஸர்வக்ஞுனை ஈசுவரனை நாடுபவர்கள் அக்ஞான பரவசர்களாகலாம். ஆனுல் ஆசார்யன் திருவடிகளை நாடுப வர்களுக்கு அக்ஞானம் எப்படிவரும்?'' என்ற ஆண்டான் எம் பெருமானுரின் கமலப்பாதங்களை நோக்கினுர், ஸ்மரித்தாரி உள்ளூர.

இதற்கு பதில் சொல்ல உடையவர் சில விநாடிகள் மௌனமானுர். பிறகு வேறு சுவட்டில் கேள்வியைத் திருப் பினுர். ''ஆண்டான்!'' என்று அன்பு குரலில் சொட்ட அழைத்தார்.

''ஸ்வாமி!'' பஞ்சாங்க சுவடிகளை எட்ட வைத்துவிட்டு தாளும் தடக்கையும் கூப்பி நின்றுர் ஆண்டான்.

''அழகிய மணவாளனை தினம் சேவிக்கிருயா?'' என்று கேட்டார் எம்பெருமானுர்.

''சேவிக்கிறேன் ஸ்வாமி'' ஆண்டான் விண்ணப்பித்துக் கொண்டார்.

எம்பெருமானுர் முகத்தில் எப்பொழுதுமுள்ள பிரகாசம் பெரிதும் விரிந்தது. ''ஒரு நாள் சேவித்த அழகிய மண வாளனை மறுதினம் சேவிப்பானேன்?'' என்று வினவினுர். இதைக் கேட்டபோது அவர் முகம் சூர்யபிம்பமாயிற்று.

ஆண்டான் அந்த பிம்பத்திற்கு அடிமைப்பட்டு, பிரமையால் ஆட்கொள்ளப் பட்ட மனத்துடன் நின்றார் பல விநாடிகள். கடைசியாகப் பேசினபோது அவர் குரல் தழுதழுத்துக் கிடந்தது. "ஸ்வாமி! அழகிய மணவாளன் சேவை நிலம் தினம் புதிதாயிருக்கிறது. ஒரு தினத்தின் சேவையில் லாத விசேஷம் அடுத்த தினத்தில் எழுகிறது. சாந்தியை அளிக்கிறது" என்றார் ஆண்டான்.

ஸ்வாமி ஆண்டானை நோக்கி "ஆண்டான்! தினம் தினம் தனித்தனி விசேஷத்தில் தோன்றும் எம்பெருமான் ஆண்டுக்கொரு முறை வரும கருட சேவையில் மட்டும் விசேஷத்தைக் காட்டமாட்டானா?" என்று கேட்டார்.

ஆண்டான் உள்ளத்தில் அப்பொழுதுதான் உடையவரின் உள்ளம் புரிந்தது. "புரிந்தது ஸ்வாமி! புரிந்தது! என்று கூறி உடையவரின் திருவடிகளில் விழுந்து இருதிருவடிகளையும் பிடித்துக் கொண்டார். "அக்ஞானத்துக்கு ஒரே மருந்து ஆசார்யன் திருவடிதான். இப்பொழுது புரிகிறது எனக்கு. தானுக்கு நான் விசேஷமாக சேவை சாதிக்கும் அழகிய மணவாளன் சேவை ஆண்டுக்கு ஆண்டு ஏன் விசேஷமாக இருக்கக்கூடாது? ஒரு ஆண்டில் மனத்துக்கு பூர்ண திருப்தியளிக்காத எம்பெருமான் அடுத்த ஆண்டில் ஏன் நம்மை ஆட்கொள்ளக் கூடாது? காலகதி எம்பெருமானின் சோபையைக் குறைக்குமா? சேவா விசேஷந்தான் குறையுமா? குறையாது ஸ்வாமி. எத்தனை தரம் சுவைத்தாலும் ரஸம் குறையாதது அழகிய மணவாளன் சேவை. "ரஸோவை ஸ:" என்று எத்தனை தரம் ஸ்வாமி சாதித்திருக்கும்" என்று ஆர்த்தியில் ஆழ்ந்த ஆண்டான் ஆசார்யன் திருவடிகளிலிருந்து எழுந்தாரில்லை.

எம்பெருமானாரும் அவரை எழுந்திருக்கச் சொல்லவில்லை. "ஆண்டான்!" என்று அழைத்தார்.

திருவடிகளில் புதைந்த முகத்துடன் "ஹாய்" என்று ஒலி கிளப்பினார் ஆண்டான்.

'இந்த ஆண்டு கருட சேவையில் ஒரு விசேஷம் இருக்கும்'' என்றார் எம்பெருமானார்.

''ஸ்வாமி க்ருபை''. இதற்கு மேல் ஆண்டான் பேசவில்லை.

''விசேஷம் என்னவென்று கேட்கவில்லையே?''

''ஆசார்யனை கேள்வி கேட்பது அக்ஞானம்''

''சந்தேகம் கேட்பது அக்ஞானமாகாது. உலகத்தில் விஷய ஞானம் வேறு. விபரீத ஞானம் வேறு. விஷய ஞானத்துக்குக் கேள்விகள் அவசியம். ஸ்ரீ ராமாயணம் கேள்வியில் பிறந்தது, விரிந்தது ''கோன்வஸ்மின் ஸாம்ப்ரதம் லோகே குணவான்'' என்று வால்மீகி கேட்டிராவிட்டால் ஸ்ரீராமாயணம் பிறந்திருக்காது. நமது பகவத் விஷயமும் அப்படித்தானே இதில் வேறு யாரும் கேட்கவில்லை. 'உயர்வற உயர்நலம் உடையவன் எவன்?'' என்று ஆழ்வாரே தம்மைக் கேட்டுக் கொண்டார், வால்மீகியின் அதே கேள்வி தான். அங்கு வடமொழி, இங்கு தென்மொழி. அங்கு விரிந்தது வேதம் காவியமாக. இங்கு விரிந்தது வேதம் திருவாய்மொழித் தமிழ்மறையாக. ஆகையால் கேள்வி அவசியம். அதாவது சரியான கேள்வி'' என்று உபதேசித்தார் எம்பெருமானார். ''எழுந்திரு ஆண்டான்'' என்றும் கட்டளையிட்டார்.

ஸ்வாமியின் அற்புத மொழிகளை, உவமைகளை, சித்தாந்தத்தை அன்று முழுவதும் ஆண்டான் எண்ணிக்கொண்டிருந்தார். அன்றிரவு ஸ்வாமி நித்திரை சார்த்திக்கொள்ளு முன்பு அவர் திருவடிகளை வருடிக்கொண்டிருந்தார் ''கமலப் பாதங்கள்! என்ன அற்புதம்?'' என்று நினைத்தார் ஆண்டான்.

அதே இரவில் சிந்தாமணியில் தனது பஞ்சணையிலிருந்த அஞ்சுகத்தின் மலரடிகளை வருடிக் கொண்டிருந்த வில்லிதாஸனின் வலிய மனத்திலும் அதே எண்ணம் எழுந்து அலைமோதிக்கொண்டிருந்தது. (தொடரும்)

# அபசாரமும் அபிமானமும்

கடற்கரையிலே மற்றொரு கடல்போலப் பரந்திருக்கும் வானர சேனைகளுக்கு நடுநாயகமாய் நிற்கிறார் சக்கரவர்த்தித் திருமகன். "ஸர்வலோக சரண்யா! ராகவா!" என்கிற தீனக் குரல் கேட்கிறது. வானரர் அனைவரும் குரல் வந்த திக்கை அறிய நாற்புறமும் நோக்குகின்றனர். இறுதியில் வானத்தை அண்ணாந்து நோக்கிக் கண்டறிகின்றனர் அபயக்குரலை. தலையிலே நெருப்புப் பற்றி எரியுமவன்; மடுக்கரையை நோக்கி ஓடிவருமாப் போலே, தயரதன் பெற்ற மரகத மணித்தடமான ஸ்ரீ ராமனைச் சரண்புக வந்துள்ள விபீஷணனை அவனது மந்திரிகள் நால்வருடனும் காண்கின்றனர். வானரக் கோனிடம் தெரிவிக்கிறார்கள். நாயகரத்நமான பெருமானுக்குத் தெரிவிக்கிறான் சுக்கிரீவன்.

---

ஸ்ரீ வில்லிபுத்தூர் வித்வான் R. கண்ணன் ஸ்வாமி

---

பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவியான ராவணனின் பின் பிறந்த தம்பியாகிய இவனைச் சேர்த்துக் கொள்ளலாகாது என்கிறான் குரக்கரசன். கூடுகிறது மந்திராலோசனை சபை. அரசனாகிய சுக்கிரீவன் கருத்துக் கேற்பவே இளவரசனாகிய அங்கதனும் அமைச்சர் சரபன், ஜாம்பவான், மைந்தன் ஆகியோரும் விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாகாது என்பதனைத் தக்க காரணங்களுடன் எடுத்துரைக்கின்றனர். அரசன் எவ்வழி அமைச்சர் அவ்வழி அன்றோ. அடுத்து, அனைவரது கருத்துக்களையும் கண்டித்து, "விபீஷணன் சேர்த்துக் கொள்ளத் தக்கவனே" என்பதை நுண்மாண் நுழைபுலம் மிக்கவரும் ஸசிவோத்தமருமான அனுமான் அழகுற எடுத்துரைக்கிறார்.

தஞ்சமடைந்தவரைக் காப்பதற்கென்றே தரணியில் வந்துதித்த வள்ளலான ராகவன் விபீஷணனுக்கு அபயமளிக்கிறார். திருடவ்ரதராகிய (எடுத்துக் கொண்ட கொள்கையில் நிலைத்து நிற்பவர்) பெருமாள் திருவுள்ளத்தை உணர்ந்த

சுக்கிரீவன் வேறு வழியின்றிக் கடைசியில் சமாளித்துக் கொள்கிறான் "ராகவா! விபீஷணன் வெள்ளை உள்ளத்தவன் என்பதை அடியேனும் அறிவேன். அடியார்களைக் காப்பதில் தேவரீருக்கு உள்ள வைற்றத்தை உலகத்தார்க்கு உணர்த்துவதற்காகவே எதிர் வழக்காடினேன்; பொறுத்தருளவும்" என்கிறான். பெருமாள் சிரிக்கிறார். 'சுக்கிரீவா! எந்த விபீஷணனைச் சேர்த்துக்கொள்ளலாகாது என்று தடுத்துக் கூறினையோ அதற்குக் கழுவாயாக (பிராயச்சித்தமாக) நீயே கைகொடுத்து அவனை அழைத்து வருவாயாக" என்றார் பெருமான். அதுகேட்ட ஜாம்பவான் தனுக்குற்றார்.

நெருப்பின் சூட்டைத் தணிக்க வேண்டுமானால் நீரை விட்டு ஆற்றலாம். அதுபோன்று எம்பெருமானது திருவுள்ளத்திலே நாம் பண்ணிய அபசாரத்தாலே, கோபமாகிய நெருப்புத் தோன்றுமேல் அந்நெருப்பை ஆற்றுகைக்கு அவனடியார்களுக்குச் செய்யும் தொண்டாகிய தண்ணீரைப் பயன்படுத்தித் தணிவிக்கலாம். ஆனால் நீரே கொதிக்கத் தலைப்படுமேல் அந்நீரை ஆற்றுவதற்கு உபாயம் அந்நீரே தான் ஆகும். அதுபோன்று அடியார்களிடத்தில் அபசாரப் படுவோமே யானால் அதை ஆற்றுவதற்குவழி? வெந்நீரை ஆற்றுவதற்கு உபாயம் தண்ணீர்தானேயொழிய வேறு இல்லை. அடியார்களிடத்தில் பட்ட அபசாரத்தைப் போக்க வழி அவ்வடியார்களுக்குத் தொண்டு செய்வதேயொழி வேறு இல்லை இதனை உணர்ந்தவராகிய ஜாம்பவான், அங்கதனை நோக்கிக் கூறுகிறார். "இளவரசே! பெருமாள் திருவுள்ளத்துக்கு மாறாக பரமபாகவதோத்தமனான ஸ்ரீ விபீஷணாழ்வானைப் பலவாறு பழித்துக்கூறி சேர்த்துக் கொள்ளலாகாது என்று அபசாரப்பட்டு விட்டோம். விபீஷணனைக் கை கொடுத்துப் பெருமாளிடம் அழைத்து வருவது என்கிற பாகவத கைங்கர்யம் செய்வதன் மூலம் அவ்வபசாரத்திற்குப் பரிஹாரம் தேடிக்கொண்டு விட்டார் சுக்ரீவமஹாராஜர். நாமும் சுக்ரீவன் மனப்போக்குப்படி சென்று விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாகாது எனவழக்காடி பாகவதாபசாரப்

பட்டிருக்கும் நமக்குப் பெருமான் தண்டனை கொடுத்தே திருவாரே! என்செய்வோம் என்று ஜாம்பவான் சொல்லி நிறுத்தவும் 'ஜய ஜய'' என்ற பேரரவம் கேட்கிறது.

அனைவரும் ஒலிவந்த திசையை நோக்கிச்சென்று பார்க்கிறார்கள். பெருமாள்—விபீஷணனைநோக்க, ''தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே; தந்தேன்'' என்றார். வானர வீரர் அனைவரும் விண்ணதிர ஜயகோஷம் புரிகின்றனர். ஸ்ரீ ராகவனால் நியமிக்கப் பெற்ற இளையபெருமான் விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கிறார். இலங்கைக் கதிபனான விபீஷணனுக்கு வானரசேனை அணிவகுப்பு மரியாதை செய்யட்டும் என்று பெருமாள் நியமித்தார். ராணுவ மரியாதை செலுத்தும் வகையில் எழுபது வெள்ளம் வானர வீரர்களும் அணிவகுத்து நிற்கிறார்கள். சிற்பிகள் பலர் அருமையான வேலைப்பாட்டுடன் கூடிய அழகியதொரு சந்தன விமானத்தைக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். பெருமாளை வணங்கி நிற்கும் விபீஷணனை, சுக்ரீவனும், லக்ஷ்மணனும் கைகொடுத்து அழைத்துச் சென்று பல்லக்கில் அமர்த்துகின்றனர். ஜாம்பவான் கடைக்கணிக்கவே சடக்கென்று முன் வரிசையில் அங்கதனும் ஜாம்பவானும் பல்லக்குக் கொம்பைச் சுமந்து நிற்கிறார்கள். பின்வரிசையில் சரபனும் மைந்தனும் பல்லக்கைச் சுமந்து நிற்பதைக்கண்ட பெருமாள் ''சபாஷ்'' என்று கூறிப் பேரானந்த முற்றார். வானரத்தலைவர் நால்வரும் ஒருவாறு மனம் தெளிந்து, நாம் பட்ட பாகவதாபசாரத்தைப் போக்கிக் கொள்ள பாகவத கைங்கர்யம் செய்யும் வாய்ப்புப் பெற்றோமே எனநிம்மதிப் பெருமூச்சு விட்டனர். இச்செய்தியை அழகுறத் தெரிவிக்கிறார் கம்பர்.

**''அந்தமில் குணத்தினானை அடியினை முடியினோடும்**
**சந்தன விமான மேற்றி வானரத் தலைவர் தாங்க**
**இந்திரற் கரிய செல்வ மெய்தினா னிவனென் றேத்தி**
**மந்தரத் தடந்தோள்வீரர் வலஞ்செய்தார் தானைவைப்பை''**

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமாநுஜம்

ப்ரஹ்மவிதாப் நோதிபரம் என்று ஓதிய வேதம் காரணம் துத்யேய: என்று விதித்தது. ப்ரஹ்மத்தை அறிபவன் மேலான பேற்றைப் பெறுகிறான் என்றும், காரணப்பொருளை அன்புடன் த்யானிப்பாயாக (பக்தி பண்ணுவாயாக) என்றும் இவ்வாக்கியங்களுக்குப் பொருளாகும். ப்ரஹ்மம் என்றால் பெரியதும், தன்னை அண்டினாரைப் பெரிதாக்க வல்லதுமானது. வருணனின் குமாரனான ப்ருகு தன் தகப்பனைக் கிட்டி, "எனக்கு ப்ரஹ்மத்தை உபதேசிப்பீராக!' என்று வேண்ட, ப்ருகு, நீயே சிந்தனை செய்து (ஆராய்ந்து) ப்ரஹ்மத்தை அறிவாயாக என்று ப்ரஹ்மத்தின் லக்ஷணத்தை,

> யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே – யேந ஜாதாநி ஜீவந்தி
> யத்ப்ரயந்த்யபிஸம் விசந்தி – தத்விஜிஜ்ஞாஸஸ்வ –
> தத்ப்ரஹ்மேதி (தைத்ரீய உபநிஷத்)

என்று காட்டித் தந்தார். எவனிடமிருந்து இந்தப் பிராணிகளெல்லாம் உண்டாயினவோ, எவனால் பிறந்தவை உயிருடன் ஜீவிக்கின்றனவோ, எவனிடத்தில் ப்ரளயத்தின் போது இவை புகுகின்றனவோ அவனே ப்ரஹமம். ஆதிபகவன் முதற்றே உலகு என்று திருவள்ளுவர் கூறுவது போல இவ்வுலகையும அதிலுள்ள ஜீவராசிகளையும் படைத்த ஆதிபுருஷனே ப்ரஹ்மம். இந்த ப்ரஹ்மமே தான் படைத்ததை ரக்ஷிக்கிறான். ஒரு கால விசேஷத்தில் இதைத் தன்னுள்ளே லயமடையச் செய்கிறான். இப்படியெல்லாம் செய்பவனே ப்ரஹ்மம் எனப்

படுகிறன். இவனையே ஜகத்காரணவஸ்துவாக அறிந்து பக்தி பண்ணி ச்ரேயஸ்ஸை அடைய வேண்டும்.

இந்த உலகங்கள் தோன்றுவதற்கு முன்னே இருந்த "ஆதி" புருஷனே இவ்வுலகங்கள் தோன்றுவதற்குக் காரணமாதல் வேண்டும். ஸதேவ இதம் அக்ரே ஆஸீத் என்று ஒரு காரண வாக்யம். அக்ரே — ஸ்ருஷ்டிக்கு முன்பு ஸத் (உள்ளது) தான் இருந்தது என்றும் இதுபோல ப்ரஹ்மம் தான் இருந்தது என்றும், ஆத்மா தான் இருந்தது என்றும் வேதம் பொதுப் படையாகச் சொல்லிற்று. மேலும் ஏகமேவ—அத்விதீயம்—ஒன்றே—இரண்டாவதில்லை என்றும் ஓதிற்று. பக்திக்கு விஷயமாக நாமரூபங்கள் உள்ள ஒரு வஸ்துவே அமைய முடியும். நாராயண ஆஸீத் என்றும் ஹிரண்யகர்ப்பஸ்ஸம வர்த்த தாக்ரே என்றும் சிவ ஏவகேவலம் என்றும் சில தெய்வங்களின் பெயர்களையும் இத்தொடர்பில் சொல்லி வைத்தது. நாராயணன் இருந்தான், ப்ரஹ்மா (சதுர்முகன்) இருந்தான் என்றும் வெறும் சிவனே இருந்ததாகவும் சொல்லியபடி, ஒரே குழப்பமும் தலைவேதனையாகவும் உள்ளதே! ஆனால் வேதபுருஷனின் உள்ளத்தைத் தெளிவாக அறிவது கஷ்டமில்லை. ஒரு இடத்தில் ஏகோஹவை நாராயண ஆஸீத் — நப்ரஹ்மா — நேசாந: என்று தெள்ளத் தெளியக் காட்டித் தந்துள்ளான். "நாராயணன் ஒருவனே இருந்தான்—ப்ரஹ்மாவும் இல்லை, ஈசன் என்னும் சிவனுமில்லை" என்று ஐயமறக் காட்டித் தந்து; மேலும்,

நாராயண பரம்ப்ரஹ்ம—தத்வம் நாராயண: பர:
நாராயண பரோஜ்யோதி: — ஆத்மா நாராயண: பர:
யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மை த்ருச்யதே ச்ருயதேபி வா
அந்தர் பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தித:
(தைத்ரீய உபநிஷத்)

என்றும் தெளியவைத்தது வேதம். மேலான ப்ரஹ்மம் நாராயணனே, உயர்ந்த உண்மையான பொருள் நாராயணன்;

மேலான ஆத்மாவும் நாராயணனே; இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமான எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் ஒக்கப் பரந்து நிறைந்திருப்பவன் நாராயணனே என்று மேல் வாக்கியங்களுக்குப் பொருள்.

பகவத் சப்தம் போல ப்ரஹ்ம சப்தமும் ஓரளவு மேன்மை படைத்த பலவ்யக்திகளிடம் உபசாரமாக ஏறிடப்படுவதை நாம் காண்கிறோம். பரம் ப்ரஹ்ம என்று நாராயணனுக்கு மேலான ப்ரஹ்மம் இல்லாமையைக் காட்டித் தருகிறது. ஜ்யோதி என்று ஒளிமிக்க வஸ்து; கதிரவன் வெளி இருளைப் போக்கவல்ல ஒளி. அகவிருளைப் போக்கவல்ல மேலான ஒளி நாராயணனாகத்தான் இருக்கக்கூடும். ஆத்மா என்பது அறிபவனும் நியமிப்பவனுமான ஒருவனை. நாராயணன் பரமாத்மா. நாராயண: பரம் ப்ரஹ்ம என்று விபர்யயமில்லாமல் மற்றொரு இடத்திலும் வேதம் ஓதியுள்ளது. நாராயணன் ஸர்வாந்தராத்மா என்றும் இங்கு அறியக் கிடக்கிறது.

நாராயண சப்தத்துக்கு நமது ஆசாரியர்கள் இரண்டு விதமாகப் பொருள் கொண்டுள்ளனர்—நாரங்கள் என்று சொல்லப்படும் நித்யவஸ்துக்களின் திரள்களுக்கு அயநம் (இருப்பிடம்) என்றும், நாரங்களை இருப்பிடமாகக் கொண்டவன் என்றும். நித்யவஸ்துக்கள் என்றது; விண்ணாட்டிலுள்ள பகவானுளிட்ட பல தத்வங்களையும், இந்நாட்டிலும் மற்ற தேவலோகங்களிலுமுள்ள ஜீவஸமூகங்கள் முதலான பல தத்வங்களையும். நாராணாம் அயந: என்பது நாராயந: என்றாகும். இது ஸாமாந்ய சப்தம். நாரங்களுக்கு இருப்பிடம் என்ற பொருளைத் தரும். ஆனால் ந வை நீக்கி ண வை இட்டால் இப்பதம் ஒரு குறிப்பிட்ட புருஷனையே சுட்டிக் காட்டும். முன் சொன்ன நாராணாம் அயந: என்ற பொருளும் பொருந்தும். வேதம் எல்லா[illegible]ங்களிலும் ஒக்க நாராயண என்று ஓதியதால் ஒரு குறிப்பிட்ட தெய்வத்தையே பரமபுருஷன் என்று குறிப்பது குன்றிலிட்ட விளக்காகப் பிரகாசிக்கும். ஆனால் ப்ரஹ்ம சப்தம் பெரியது என்றும் சிவ

சப்தம் மங்களம் என்றும் பொருள் படுகையால் நாராயணனை ப்ரஹ்மா என்றும் சிவன் என்றும் வ்யவஹரிக்கலாம். சிவ, சம்பு சப்தங்கள் ஸஹஸ்ர நாமத்தில் விஷ்ணுவின் பெயர்களாகப் படிக்கப்பட்டுள்ளது காண்க. ஆனால் நாராயணன் என்ற பெயர் சிவனுக்கோ ஹிரண்ய கர்ப்பனான பிரமனுக்கோ துளியும் பொருந்தாது. ஆக ஸத்—ப்ரஹ்மா—ஆத்மா—சிவ—ஹிரண்யகர்ப்ப—எல்லாம் ஸமான்ய பதங்கள். நாராயணனுக்கு இவை எல்லாம் பொருந்தும். நாராயண என்பது விசேஷப் பெயர். நாராயணனைத் தவிர்த்து வேறு யாரிடமும் இப்பெயர் பொருந்தாது. மேலும், நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே—நாராயணாத் ருத்ரோ ஜாயதே (நாராயணனிடமிருந்து ப்ரஹ்மா உண்டானார்— நாராயணனிடமிருந்து ருத்ரன்—சிவன்—உண்டானார்) என்று ப்ரஹ்மாவுக்கும் சிவனுக்கும் நாராயணனைக் காரணமாக வேதம் ஓதுகிறது. திருமழிசைப்பிரானும், இதையடி ஒற்றியே

**நான்முகனை நாராயணன் படைத்தான்**
**நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்**

என்று அருளிச் செய்தார். **ஸோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை தம்ஹ தேவம் ஆத்ம புத்தி ப்ரகாசம் முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே** என்று கடவல்லியிலும் ச்வேதாச்வதரத்திலும் காணலாம். "எவர் பிரமனை முதலில் படைத்தாரோ, அவனுக்கு வேதங்களைக் காட்டித்தந்தாரோ, அந்த தேவனை மோக்ஷத்தில் ஆசையுள்ள நான் சரணம் பற்றுகிறேன்" என்று இங்கு பொருள். இந்த தேவன் நாராயணனே என்பது தெளிவு. இப்பரமபுருஷனை தோஷமற்றவனாகவும், கல்யாண குணாத்மகனாகவும், எல்லாமறிந்தவனாகவும், ஸர்வசக்தியாகவும், ஸத்யஸங்கல்பனாகவும், கண்கவர்—நெஞ்சுகவர் அழகுள்ள திருமேனி படைத்தவனாகவும் நமக்குக் காட்டித் தந்துள்ளதை முன் இதழ்களில் அநுபவித்துள்ளோம்.

பண்டைத் தமிழ்நாட்டில், சங்ககாலத்திலும், அதற்கு முன்பும் வேதம் காட்டிய வழியினின்றும் துளியும் மாறு படாமல் இருந்தனர் தமிழர்கள். கடல் சூழ்ந்த இந்த பூமிப் பரப்பை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று நான்கு நிலங்களாகப் பிரித்து அவற்றுள் காடுசார்ந்த நிலமான முதல் பிரிவுக்கு (முல்லை) திருமாலை அதிதெய்வமாக முதற்கண் வைத்துச் சிறப்பித்துள்ளதை பழந்தமிழ் நூலான தொல் காப்பியத்தினுல் காணலாம். சைவநூலான பெரிய புராணத்தில்

> அங்கண் முல்லையின் தெய்வமென்றருந் !தமிழுரைக்கும்
> செங்கண்மால்

என்று திருமால் பேசப்படுவதையும் காணலாம்.

"மாயோன் மேய காடுறையுலகம்" என்று முல்லை நாட் டையும், அதில் வாழ்ந்த மக்களை ஆயர் என்றும் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. மாயோன் என்பது கண்ண பிரானைக் குறிக்கும் என்பதில் விவாதமே கிடையாது. இவனே தொல்காப்பியராலும் அவர் முன்னேராலும் குறிக்கப்பட்ட பரம்பொருளான தெய்வம். இவனை ஈடு மெடுப்புமிலாத புகழ்படைத்தவனுகத் ¦தொல்காப்பியம் கொண்டாடுகிறது.

(தொடரும்)

# மன்னியசீர் மார்கழி

மன்னவன் திருமலை மாதவன் திருமகள்
மன்னிய உலகிடை வைகும்நாள் மார்கழி!

மின்னிடும் பனிஇடை மேகலை மாதரார்
கன்னியர் திருவிழா காணும்நாள் மார்கழி!

மங்கலக் குங்குமம் மங்கையர் நெற்றியில்
சங்கொலி எழுப்பிடும் தங்கநாள் மார்கழி!

நற்றிருப் பாவையை நல்லறி வாக்கினர்
கற்றுடன் மற்றவர்க் காக்குநாள் மார்கழி!

மண்ணிடைப் பூச்சிகள் வானிடைச் சீர்பெற
கண்ணனை எண்ணியே களிக்குநாள் மார்கழி!

பொன்வண்ண நெல்லுடை போர்த்தியே நிலமெலாம்
மன்னவன் கண்ணனை மயக்குநாள் மார்கழி!

நீர்நிறை தேக்கமும் நேரிழை கூட்டமும்
கார்முகில் மேளமும் கலக்குநாள் மார்கழி!

வார்குழல் ஆய்ச்சியர் வாலிபப் பேற்றினை
ஓர்முறை எண்ணியே உருகுநாள் மார்கழி!

அஞ்சனக் கண்களின் ஆரத்தித் தட்டுகள்
மஞ்சத்தில் நாதனை மயக்குநாள் மார்கழி!

ஆவொடும் பூவொடும் மாவொடும் காவொடும்
தேவனின் திருக்குணம் சேருநாள் மார்கழி!

ஆயர்பெண் மத்தெலாம் ஆடியே நடமிட
தோயுமோர் வெண்ணெய்க்குச் சொந்தநாள் மார்கழி!

கைதவழ் செல்வனைக் கண்ணனைப் போலவே
மைதவழ் கண்ணுடன் மாற்றுநாள் மார்கழி!

வான்பெரும் தவத்தினர் வைகுந்தம் ஏகவே
தாம்பெறும் சகத்தினைத் தருவதும் மார்கழி

திருமலை நாதனும் ஸ்ரீரங்க நாதனும்
ஒருவரை ஒருவர்கண் டுணரும்நாள் மார்கழி!

எண்ணரும் நலமெலாம் எண்ணியே குளிப்பவர்
திண்ணமாய் அடையவே திறக்குநாள் மார்கழி!

பீடுறும் மார்கழிப் பிறப்பினைப் போற்றியே
நாடுறும் நன்மைகள் நாளெலாம் கோடியே!

—கண்ணதாசன்

# திருப்பாவை ஜீயர்

ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்

## அண்ணங்கராசாரியர்ஸ்வாமி

எழுதியருளியது

★

ஸ்ரீ ஆசார்யன் ஸௌத்திரீஞு மார்கழி மலர் இணைப்பு



# திருப்பாவை ஜீயர்

நம்முடைய ஸம்பிரதாயத்தில் எம்பெருமானார்க்குத் திருப்பாவை ஜீயரென்று ஸுப்ரஸித்தமான வ்யபதேச முள்ளது. திருப்பாவையில் மிக்க ஈடுபாடுகொண்டு அதை யநுஸந்திப்பதில் போர அபிநிவிஷ்டராயெழுந்தளி யிருந்தது பற்றி அங்ஙன் வ்யபதேச முண்டாயிற்று என்பது தவிர மற்று மோரீ சிறந்த ஹேதுவுமுண்டு. அதாவது, திருப்பாவையில் ஒவ்வொரு பாசுரத்திலும் எம்பெருமானாரைச் சிந்திக்க வேண்டும்படியான சொற்றொடர்கள் அமைந்திருக்கின்றன வென்பதே. இஃது ஏறிட்டுரைக்கும் முறையிலன்றிக்கே ஏற்ற முறையில் விவரிக்கப்படுமாறு காண்க.

## 1. மார்கழித் திங்கள்

*மதிநிறைந்த நன்னாள்" என்பதற்குச் சந்திரன் நிறைந்த நன்னாள்—பரிபூர்ண சுகலபக்ஷம் என்பது ஒரு பொருள். மதி—ஞானம்! அது நிறையப்போகிற நல்லநாள் என்பது உள்ளுறை பொருள். எம்பெருமானார் அவதரித்த நாள் இருள்தருமா ஞாலத்தவர்களுக்கு ஞானம் நிறைவதற்கு ஹேதுவான நன்னாளன்றோ? 'நிறையப்போகிற' என்ன வேண்டுமிடத்து (நிறைந்த) என்றது காலவழுவமைதி யென்பர் தமிழர். ''ஆசம்ஸாயாம் பூதவச்ச'' என்பது வடமொழி வியாகரணம். யதிராஜ ஸப்ததியில் *அநபாய விஷ்ணுபத ஸம்ச்ரயம் பஜே* என்கிற சுலோகத்தினால் எம்பெருமானார் விலக்ஷண சந்திரனாக ப்ரதிபாதிக்கப்பட்டுள்ளார். அந்த யதிராஜ சந்திரன் தோன்றிய நன்னாள் என்னவுமாம். சித்திரைத் திங்களானது மனிதர்களுக்கு முதல் மாதம். மார்கழித்திங்களானது தேவர்களுக்கு முதல்மாதம் என்னும் பொருத்தமுமுளது. இது

வியாக்கியானங்களிலும் விசதம். ஆகவே, சுவாமியின் அவதாரம் முதல் மாஹத்திலெஙகிற ப்ரஸித்திக்குக் குறையில்லை [போதுவீர் போதுமினோ] "எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்" என்கிறவர்களைப் போலன்றிக்கே வருகிறவர்களெல்லீரும் வாருங்கள் என்று உகந்து அழைத்துரைப்பவர் எம்பெருமானாரேயாவர்.

## 2. வையத்து வாழ்வீர்காள்!

[பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்] திருப்பாற்கடலிலே துயின்ற பரமபுருஷன் ஸ்ரீமந்நாராயணன். நம்மாழ்வார் "உனது பாலேபோல் சீரில் பழுத்தொழிந்தேன்" என்கிற பாசுரத்தினால் பகவத் குணங்களைப் பாலாகப் பேசினார். அவர்தாமே அக் குணங்களைக் கடலாகவும் பேசினார், "சீர்கடலையுள் பொதிந்த" என்ற பாசுரத்தினால். இவற்றுக்குச் சார்பாக "அநந்த குணஸாகரம் ப்ரஹ்ம" [அனந்தமான குணஸாகரத்தையுடையவர் பரமபுருஷர்] என்றருளினார் ஸ்ரீபாஷ்யகாரர். அவ்வளவோடு நில்லாமல் அக்குணங்களையே தமது திவ்யக்ரந்தங்களில் வாய்வெருவுவதும் செய்கின்றார். ஏவஞ்ச, பகவத் குணஸாகரத்திலே அஸ்தமிதாந்யபாவராய் இன்புறும் பரமர் எம்பெருமானாரே

## 3. ஓங்கி யுலகளந்த உத்தமன்

"மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து", "ஞானங் கனிந்த நலங்கொண்டு" இத்யாதிகளான நூற்றந்தாதிப் பாசுரங்களிற்படியே எம்பெருமானைவிட ஓங்கி-அதிசயித்து, உலகத்தை யெல்லாம் ஸ்வாதீனமாக்கிக் கொண்ட உத்தமர் ஸ்ரீராமாநுஜ ரொருவரே. ஒருவர்க்கும் ஒன்றுஞ் சொல்லாதவர் அதமர். நிர்ப்பந்தத்தினால் சொல்லுபவர் மத்யமர். தம்முடைய கருணையினால் தாமே சொல்லுபவர் உத்தமர். "ஓராண் வழியா யுபதேசித்தார் முன்னோரென்கிற உபதேசரத்தின மாலையின்படி உத்தமர் ஸ்ரீராமாநுஜ ரொருவரே

யாவர். நூற்றந்தாதியில் *மற்றொரு பேறு மதியாதென்கிற பாசுரத்தில் உத்தமனாகவும் கூறப்பட்டார்.

## 4. ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்

இப்பாட்டில் எம்பெருமானுடைய ஆழியும் சங்கும் சார்ங்கமும் வருவதனால் "அடையார் கமலத் தலர்மகள் கேள்வன்" என்கிற நூற்றந்தாதிப் பாசுரப்படிக்கும், "வல்குதே பஞ்சபிராயுதைர் முராரே" என்கிற யதிராஜ ஸப்ததிப்படிக்கும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவ விசேஷமான எம்பெருமானார் நினைவூட்டப்படுகிறார். ஒன்றுநீ கைகரவேல்— அருமையாகப் பெற்ற அர்த்த விசேஷங்களை ஒன்றும் ஒளித்திடாமல் வர்ஷித்த மேகம் *இராமானுச னென்னுஞ் சீர் முகிலே ஆழியுள் புக்கு என்றவிடத்து "உபநிஷத் துக்தாப்தி மத்யோத்த்ருதாம்" என்கிற ஸ்ரீபாஷ்யகார திவ்யஸூக்தி மிகப்பொருத்தமாக அநுஸந்திக்கத்தகும்.

## 5. மாயனை மன்னுவடமதுரை

ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கு எம்பெருமானார். இடக்கை வலக்கை யறியாத இடையர்கள் வாழ்ந்தவிடம் திருவாய்ப்பாடி. அதில் தோன்றிய அணிவிளக்கு "ஆயர்பாடிக் கணிவிளக்கே!" என்று யசோதைப் பிராட்டியா லழைக்கப்படுகிற *அச்யுதபாநுவான கண்ணபிரான். ந்ருபசு; என்று ஆளவந்தாரும். *வ்ருத்த்யா பசுர் நரவபு:* என்று மணவாள மாமுனிகளு மருளிச்செய்தபடி பசுப்ராயர்களான அஸ்மதாதிகள் வர்த்திக்குமிடமும் ஆயர்குலமாதலால் இருள்தருமா ஞாலமாகிற இவ்வாயர் குலத்திலே தோன்றிய அணிவிளக்கு ராமாநுஜ திவாகரர். "புண்யாம்போஜ விகாஸாய பாப த்வாந்த க்ஷயாய ச, ஸ்ரீமாநாவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:" என்னக்கடவதிறே.

## 6. புள்ளுஞ் சிலம்பின காண்

"புள்ளரையன் கோயில் வெள்ளை விளிசங்கு" என்றது எம்பெருமானார்க்கு மிகச்சிறந்த ப்ரத்யபிஜ்ஞாபகம். "பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே" என்றபடி பால் போன்ற நிறத்தது சங்கு; ஸ்வாமி யெம்பெருமானாரும் "துக்தோதந்வத்தவளமதுரம் சுத்தஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம்" என்றபடி பால் போன்ற நிறத்தவர். இந்தச் சங்கு எங்கு வாழ்ந்ததென்னில் [புள்ளரையன் கோயில்] "பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறும் புனலரங்கமே" என்று பெரியாழ்வார் புள்ளரையன் கோயிலாகக் கூறிய திருவரங்கத்தில் வாழ்ந்தது. சக்கரம் சங்கு என்ற இரண்டு திவ்யாயுதங்களில் சக்கரமானது "கருதுமிடம் பொருது" என்ற அருளிச செயலின்படியே *காசிவிப்லோஷாதி நாநாகார்யவிசேஷங்களுக்காக பாஹ்ய ஸஞ்சாரங்கள் செய்துகொண்டே யிருக்கும். திருச்சங்கு அப்படியன்றியே "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம், கண்படை கொள்ளல் கடல் வண்ணன் கைத்தலத்தே" என்னும்படி யிருக்கும். ஸ்வாமி தாமும் "யாவச் சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" [ஸ்ரீரங்க கத்யே] என்ற ஸ்ரீரங்கநாதன் கட்டளையைப் பெற்றுக் கோயிலே கதியாயிருந்தவர். ஆகவே 'கோயில் சங்கு' என்றது ஸ்வாமி யெம்பெருமானார்க்கு மிகப்பொருத்தம்.

## 7. கீசுகீசென்றெங்கும்

கலந்து பேசின பேச்சரவம். பூர்வாசார்ய ஸூக்திகளோடே கலந்திருக்கும்படி (அவற்றுக்கு முரண்படாதபடி) ஸ்ரீ ஸூக்தியருளிச் செய்தவர் ஸ்ரீராமாநுஜர் என்பது இவருடைய திவ்யஸூக்தியினால் ஸித்தம். ஸ்ரீபாஷ்யம் தொடங்கும் போதே "பகவத் போதாயந க்ருதாம விஸ்தீர்ணாம் ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு; **தந்மதாநு**

ஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே'' என்றருளிச் செய்தவர் ஸ்வாமி யொருவரேயன்றே. அன்றியும் *கலந்து பேசுவதாவது வடமொழி தென்மொழிகளைக் கலந்து மணிப்ரவாளமாகப் பேசுவது. இத்தகைய க்ரந்தமாக முதன் முதலாகத் திருவாருயிரப்படியே தோன்றியது. அது பிள்ளானருளியதாயினும் ''எதிராசர் பேரருளால்'' என்று மணவாள மாமுனிகளருளிச் செய்தபடியே ஸ்வாமி கற்பித்த நடையேயாம் அது. ஆகவே இருமொழிகளையுங் கலந்து பேசின பேச்சுக்கு நிதானபூதர் ஸ்வாமியென்று குறிப்பிட்டவாறு.

## 8. கீழ்வானம் வெள்ளென்று

'மிக்குள்ள பிள்ளைகளும் போவான் போகின்றாரைப் போகாமல் காத்து'' என்றதில் ஸ்வாமியின் ப்ரபாவமே நன்கு ஸ்புரிக்கும். ''அர்வாஞ்சோ யத்பத ஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய, பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயமுபகதா தேசிகா முக்திமாபு:'' என்ற பட்டர் ஸ்ரீஸூக்திப்படிக்கும், ''பாத கோடீரயோஸ் ஸம்பந்தேந ஸமித்யமாந விபவாத்'' என்ற நிகமாந்த மகாகுரு ஸ்ரீஸூக்திப் படிக்கும் திருவடி ஸம்பந்தத்தாலே பின்னோர்களையும் திருமுடி ஸம்பந்தத்தாலே முன்னோர்களையும் வாழ்வித்தவர் ஸ்வாமி யெம்பெருமானார். மிக்குள்ள பிள்ளைகளென்றது ஸ்வாமிக்கும் பூஜ்யர்களாயிருந்த பூருவர்களை போகாமல் காத்து என்றது, தாம் அவதரித்து அவர்களை நற்கதியெய்துவித்தபடியைக் காட்டுமதாம். (இதைப்பற்றித் தனி நூலில் விரிவு காண்க.)

## 9. தூமணி மாடத்து

[மணிக்கதவம் தாள்திறவாய்] மணியென்று ரத்னத்திற்குப் பெயர். நவரத்னங்களாகையாலே ஒன்பது என்கிற ஸங்க்யை ஸூசிதமாகிறது. கதவு என்பது பதார்த்தங்களைச் சேமித்து வைப்பது. ஸ்வாமியினுடைய திவ்யக்ரந்தங்களை

இங்குக் கதவென்பன. ஸ்வாமி யருளிச் செய்தவை ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீ வைகுண்ட கத்யம, நித்யம் என்று ஒன்பது திவ்ய க்ரந்தங் களாகையாலே அவையே இங்கு மணிக்கதவமெனப்படுகிறது. அவற்றைத் திறக்க வேணுமென்றது அவற்றிலுள்ள அர்த்த விசேஷங்கள் எங்களுக்கும் நிலமாம்படியருளவேணு மென்றபடி.

## 10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற

*நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்* அருங்கலமே!* என்ற இரண்டு விளிகளிலும் ஸ்வாமியின் ப்ரத்யபிஜ்ஞை நன்கு உண்டாகும். **நோற்று** என்றது மஹாபாக்ய வசத் தாலே என்றபடி. **ஸுவர்க்கம் புகுகின்ற** — வர்க்கமென்று ஸமூகத்திற்குப் பெயர்; வகுப்பு என்றபடி. (ஸு) என்பதனால் மிகச்சிறந்த வகுப்பு என்றதாகும். யாதவப்ரகாசரிடத்திலே வாசித்துக் கொண்டிருந்து அவர் சாயையிலே ஒதுங்கியிருந்த ஸ்வாமி அவருடைய கருத்தின்படியே ஆபத்துக்களையடைந்து போகாமல் நம்போலியர்களின் பாக்யவசத்தாலே பெருந்தேவி மணவாளனை பேரருளாளனது பரமக்ருபைக்கு இலக்காகி ஸ்ரீவைஷ்ணவ வகுப்பிலே புகுந்து அனைவர்க்கும் தாயா யிருந்தவர். **சுவர்க்கம்** என்பதற்கு ஸ்வர்க்கமென்றே பொரு ளாகிலும் ''யஸ்த்வயா ஸஹ ஸஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா'' என்ற ஸ்ரீராமாயணத்தின்படி எம்பெரு மானோடு கூடப்பெற்றவரென்றதாகும். ஸித்தாச்ரமத்தில் நின்றும் வருகிறோமென்று சொல்லிக் கொண்டு வந்த வேடனும் வேடுவச்சியுமான பகவத் தம்பதிகளோடே கூடப் பெற்றமை கூறினபடி. **அருங்கலமே!** என்றது அருமை பெருமை வாய்ந்த ஆபரணமே! என்றும் உத்தம ஸத் பாத்ரமே என்றும் பொருள்படும். நம்முடைய குருபரம்பரை யிலே மஹாபூஷணமாக விளங்குமவர் ஸ்வாமி. ''தஸ்மிந்

ராமாநுஜார்யே குருரிதி பதம் பாதி நாந்யத்ர என்னும் படிக்குப் பொருத்தமாக உத்தம ஸத்பாத்ரமாயும் விளங்குமவர்.

## 11. கற்றுக் கறவைக் கணங்கள்

இப்பாசுரத்தில் கற்றுக் கறவை யென்று தொடங்கி **கோவலர்தம் பொற்கொடியே!** என்னுமளவுள்ள விவி பூர்த்தியாக எம்பெருமானார் தன்மையையே தெரிவிக்குமதாயிருக்கும். **கற்று** *சொல்லார் தமிழொரு மூன்றும், சுருதிகள் நான்கு மெல்லையில்லா அறநெறியாவும் தெரிந்தவன்* என்ற நூற்றந்தாதிப் பாசுரப்படியே எல்லாக் கலைகளையும் கற்று. **கணங்கள் பலகறந்து**—*பஞ்சாசார்ய பதாச்ரித* என்று யதிராஜ வைபவத்தில் கூறியுள்ளதை விவரிக்கிறபடி "கவாமங்கேஷு திஷ்டந்தி புவநாநி சதுர்தச" என்கிறபடியே கோக்கள் பதினான்கு லோகங்களையும் தம்முள் வஹிக்குமா போலே சதுர்தச வித்யைகளையும் தம்முட்கொண்டு நன்றுகக் கறக்கு மாசாரியர்கள் பலரிடத்திலும் ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்கள் கேட்டு உய்ந்தவர் ஸ்வாமி. பெரிய நம்பி பக்கலிலே பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று மந்த்ரார்த்தங்கள் கேட்டும், பெரிய திருமலை நம்பி பக்கலிலே ஸ்ரீராமாயணார்த்தங்கள் கேட்டும், திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தும், திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழிப் பொருள் கேட்டும், ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே அருளிச்செயல் கற்றும் நல்வார்த்தைகள் கேட்டும் போந்தவராகையாலே *கறவைக் கணங்கள் பலகறந்தென்றது ஸ்வாமிக்கு மிகப்பொருத்தம். அதற்குமேல் **செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்**—எம்பெருமானை நிர்க்குணனென்றும் நிர்விபூதிகனென்றும் நிர்லக்ஷ்மீகனென்றும் திவ்யமங்கள விக்ரஹ ஶூந்யனென்றும் சொல்லுமவர்கள— **செற்றார்;** அவர்களுடைய திறலழிய—வாக்குமிடுக்குத் தொலை

யும்படியாக, திசைதொறு மெழுந்தருளி வாதப்போர் நிகழ்த்தியவர் ஸ்வாமி. "விப்ரம் நிராஜித்ய வாதத." என்கிறபடியே இது குற்றமாகையின்றிக்கே ஸித்தாந்த ரக்ஷணார்த்தமாகச் செய்ததாகையாலே நற்றமேயாயிற்றென்று காட்ட குற்றமொன்றில்லாத* என்றது. கோ என்னும் வடசொல் நாநார்த்தகமாகையாலே ஸ்ரீஸூக்தியையும் சொல்லக் கடவது; 'யத்கோஸஹஸ்ர மபஹந்தி தமாம்ஸிபும்ஸாம்!' என்ற விடத்திலு மிதுகாணலாம். கோ வல்லவர்—மஹா வித்வான்கள், அவர்தம் பொற்கொடி—ஸ்வாமி. கோ அ(ல்)லர்-ஸ்வதந்திரரல்லர். என்றுமாம்.

## 12. கனைத்திளங் கற்றெருமை

ஸ்வாமியின் திருவவதார ஸ்தலமான ஸ்ரீ பெரும்பூதூரில் இரட்டித்து ஸேவிக்கும் பாசுரமிது. பூருவாசாரியர்களும் தங்கள் வியாக்கியானங்களின் முடிவிலே எம்பெருமானாரை ப்ரஸ்தாவித்திருக்கும் பாசுரமுமிது. இங்கு இவ்வளவே நாமெழுதப் போதும். ஆயினும் சிறிது விவரிக்கலாகிறது. இப்பாட்டில் நற்செல்வனென்றது ஸ்வாமியைக் கருதி. நற்செல்வனென்பதை வடமொழியிற் கூறவேணுமானால் லக்ஷ்மி ஸம்பந்ந: என்னவேணும். ஸ்ரீ ராமாயணத்தில் *லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:* என்னப்பட்ட இளைய பெருமாளே யன்றோ இளையாழ்வாராகத் திருவவதரித்தவர். அவர் "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று விபவாவதாரத்திலே அடிமை செய்யப்பெற்றார்; இவர் "நித்ய கிங்கரோ பவாநி" என்று அர்ச்சாஸ்தலங்களிலே ஒப்புயர்வற்ற அடிமைகள் செய்யப்பெற்றார். "மன்னிய தென்னரங்காபுரிமாமலை மற்று முவந்திடுநாள்."

## 13. புள்ளின்வாய் கீண்டானை

இப்பாட்டில் கள்ளந் தவிர்ந்து கலந்தென்றது உயிரான சொற்றொடர். "கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாப

ஹாரிணு'' என்றபடி ஆத்மாபஹாரக் கள்வமொன்றுண்டு; அது தவிரமற்றொரு கள்வம் கேண்மின்; ''ஏகஸ் ஸ்வாது ந புஞ்ஜீத பஹூபிஸ்ஸஹ'' ''இன்கனி தனியருந்தான்'' என்கிறபடியே போக்ய பதார்த்தங்களைப் பலரோடுகூடி யநுபவித்துக் களிக்கையன்றிக்கே அசலறியாதபடி யநுபவிக்கை கள்வம்; எம்பெருமானார்க்கு முற்பட்ட ஆசாரியர்களிடத்து இத்தகைய கள்வமிருந்தது; அதனைத் தவிர்த்தவர் ஸ்வாமி யொருவரே. தவிர்ந்து எல்லாரோடுங்கலந்து அநுபவித்தவர். ''பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்'' என்றதும் ஸ்வாமியின் பெருமையை நினைவூட்டும். பாவைக்கள மென்பது காலக்ஷேப மண்டபம்; அதில் எல்லாரும் புகப்பெற்றது ஸ்வாமிக்கு முன்பு இல்லை; அதிகார பரீக்ஷைபண்ணிப் பலர் விலக்கப்பட்டிருந்தார்களன்றோ. ஆசைக்கு மேற்பட அதிகார ஸம்பத்தி யில்லையென்று கொண்ட ஸ்வாமியின் காலத்தில் தான் பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார். அதனை நன்கு காட்டினபடி.

## 14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து

இப்பாட்டில்' 'செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின'' என்பதில் ஸ்வாமியின் திவ்யப்ரபாவமொன்று நினைவுக்கு வரும். ஸ்வாமி யாதவப்ரகாசரிடத்திலே பூர்வபக்ஷ வேதாந்தம் வாசித்தபோது *ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம* ஐததாத்ம்யமிதம் ஸர்வம் *தத் த்வமஸி* இத்யாதி ச்ருதிவாக்யங்களுக்கு அவர் அபார்த்தம் கூற, ஸ்வாமி 'இப்படியன்றோ பொருள்' என்று உபபந்நமான அர்த்தமருளிச் செய்ய, மேல் வாய்திறக்கமாட்டாதே ஹூங்காரமே பண்ணிப் போந்ததாக வைபவ நூல்கள் விளம்புகின்றன அது இங்கு நினைவுக்கு வரும். ஸ்வாமி திருவாய் மலர்ந்தருளியது. செங்கழுநீர் வாய்நெகிழ்ந்தமை; யாதவர் மறு மாற்றம் சொல்ல மாட்டாமே வாய் மூடிக்கிடந்தது ஆம்பல்வாய் கூம்பினமை. மேலே *செங்கல்பொடிக் கூறை வெண்பல்

தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்* என்றதும் ஸ்வாமிக்கு மிகப் பொருத்தம். செங்கல்பொடிக் கூறை* காஷாயேணக்ருஹீத பீதவஸநா* என்று ஸப்ததியில் போற்றப்பட்ட திவ்ய மூர்த்தி. வெண்பல் *அச்யுத யுக்மருக்மவ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே* என்னும்படி மஹாவிரக்த ஸார்வபௌமராகையாலே "யத் தஸ்மை திஷ்டதேந்ய: க்ருபணா மசரணோ தர்சயந் தந்த பங்க் தி" என்னும்படி பிறர்பாடே பல்லைக்காட்டப் பெறாதவர். தவத்தவர்—மம, மம என்னாதே 'தவ, தவ' என்று சேஷத்வம் பரிமளிக்க நிற்பவர். தங்கள் திருக்கோயில்—அமுதனாருடைய ஆதீனத்திலிருந்த கோயில் தங்கள திருக்கோயிலென்னும்படி தம்மதீனமாகப் பெற்றவர். சங்கிடுவான் 'சங்கா' என்ற வடமொழியும் சங்கு எனத் தெரியும். இச்சொல் திறவுகோல் என்னும் பொருளைத் தரும். ஆறாயிரப்படியில் இப்பொருளும் பணிக்கப் பெற்றது. ஆழ்வான் மூலமாகத் திருக்கோயில் திறவுகோலைப் பெற்ற இதிஹாஸம் இச்சொற்றொடரில் அநுஸந்திக்கலாகிறது.

## 15. எல்லே யிளங்கிளியே

இப்பாட்டில் "உனக்கென்ன வேறுடையை" என்னுஞ் சொற்றொடர் நிதியானது. உமக்கு மட்டும் அஸாதாரணமான பெருமை என்னே! என்று வியந்து கூறப்பட்டுள்ளது. ஸ்வாமிக்கு முன்னே நம்மாழ்வாரும் ஸ்ரீமந்நாத முனிகளும் ஆளவந்தாரும் நம் தர்சனத்திற்கு நிர்வாஹகர்களாயிருக்கச் செய்தேயும் 'நம்மாழ்வார் தரிசனம்' என்றோ, 'நாதமுனிகள் தரிசனம்' என்றோ 'ஆளவந்தார் தரிசனம்' என்றோ வ்யவஹாரம் வாராமே 'எம்பெருமானார் தரிசனம்' என்றே வ்யவஹாரம் நிகழ்ந்துவருகைக்கிடான ஸ்வாமியின் அஸாதாரணமான பெருமை இங்கு அநுஸந்திக்க வுரியது. மாற்றாரை மாற்றழிக்க வல்லானென்ற விடத்தில்—"பாஷண்ட த்ரும

ஷண்ட தாவதஹநச் சார்வாக சைலாசநி: பௌத்த த்வாந்த நிராஸ வாஸரபதிர் ஜைநேப கண்டீரவ:, மாயாவாதி புஜங்க பங்க கருட:'' *தற்கச் 'சமணரும் சாக்கியப் பேய்களும்...... நீசரும் மாண்டனர்* ''சாருவாகமத நீறுசெய்து'' இத்யாதிகள் நினைவுக்குவரும்.

## 16. நாயகனாய் நின்ற நந்தகோபன்

(நாயகனாய் நின்ற) ஆசார்ய கோஷ்டியில் நடுநாயகமாக நிற்பவர் எம்பெருமானார் என்று காட்டுகிறபடி. ''அமுநா தபநாதிசாயி பூம்நா யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ:'' என்ற யதிராஜஸப்ததிஸ்லோகத்தையும் காண்க. [நந்தகோபன்] எம்பெருமானைப் புத்திரனாகப் பெற்றவிஷயத்தில் எம்பெருமானார்க்கு நந்தகோபனோடு ஸாதர்மியம். யதிராஜ ஸம்பத்குமாரனென்ன வழங்கப்படுகிற செல்வப்பிள்ளையை க்ருஷ்ண கிசோர ஸ்தானீயனாகக் கொள்க. உடைய] ஸ்வாமிக்கு உடையவரென்று வழங்குந் திருநாமத்தை ஸம்ப்பித்தபடி. [கோயில்காப்பான்] கோயிலென்கிற சொல் திருவரங்கம் பெரிய கோயிலை மட்டும் சொல்லுவதாகவும் கொள்ளலாம். மற்றும் பல கோவில்களையும் சொல்லுவதாகவும் கொள்ளலாம். *தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே* என்றும் *ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவாம் அநுதிநம் ஸம்வர்த்தய* என்றும் சொல்லுகிறபடியே திருவரங்கச் செல்வத்தைக் காத்தருளினவரென்கை. *மன்னிய தென்னரங்காபுரி மாமலைமற்று முவந்திடுநாள்* என்கிறபடியே ஸகல திவ்ய தேசங்களையும் உத்தரிப்பித்தவர் ஸ்வாமியே யாதலால் கோயில்களைக் காத்தருளினவரென்பதும் பொருத்தமே. [கொடித்தோன்றுந் தோரண வாசல் காப்பானே!] *கொடியணி நெடுமதிள கோபுரம குறுகினா* என்றும் *நடுவரைத் தோரணம் நிறைத்தெங்குந் தொழுதனலருகே* என்றும் சொல்லுகிறபடியே கொடியும் தோரணமுமான வாசல்பரமபதவாசல்; அதுதன்னையும் ஸ்வாமியெம்பெருமானார் தம

ளுடைய ஆளுகையிலே வைத்துக் கொண்டிருப்பவரென்கை. எம்பெருமானார் திருவருளைப் பெறாதவர்களுக்கு அந்த வாசலிற் புகுவது அரிது என்கிற ப்ரஸித்தியைக் காட்டினபடி. [மணிக்கதவம் தாள்திறவாய்] மணியாவது ரத்னம்; நவரத்ன மென்று சொல்லப்படுவதனால் ஒன்பது ரத்னங்கள் என்று ப்ரஸித்தம். நவரத்னம் போன்ற ஒன்பது திவ்யக்ரந்தங்களை ஸ்வாமி பணித்தருளினார். ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்ககத்யம் ஸ்ரீவைகுண்டகத்யம், நித்யம் என்ற ஒன்பது திவ்ய க்ரந்தங்களையே இங்கு மணிக் கதவமென்கிறது. கதவு எப்படி பதார்த்தங்களுக்கு ரக்ஷகமோ அப்படியே இந்த திவ்யக்ரந்தங்களும் மறைப்பொருள்களுக்குச் சேமக்காப்பாக அமைந்தவை யாதலால் கதவென்றது மிகப் பொருத்தம். (கதவு கதவம்-இவை பர்யாயமே.) இந்த க்ரந்தங்களிலுள்ள பொருள்களை நாங்கள் அநுபவிக்கும் படி. செய்தருள வேணுமென்பது தாள்திறவா யென்றதன் கருத்து. “ஆயர் சிறுமியரோமுக்கு மணிக்கதவம் தாள்திறவாய்” என்று அந்வயிப்பது. அறிவிலிகளான எங்களுக்குப் புரியும் படியருளிச் செய்யவேணு மென்கை.

[மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்] எம்பெருமான் தன்னுடைய சாஸ்த்ரங்களிலே முன்னமே தேவரீரைப்பற்றிச் சோதிவாய் திறந்து பணித்தனனா னென்று கருத்து. *கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத: *கலௌ கச்சித் பவிஷ்யதி* உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:* இத்யாதி ப்ரமாணங்களை இங்கே அநுஸந் திப்பது.

## 17. அம்பரமே தண்ணீரே

அம்பரத்தையும் தண்ணீரையும் சோற்றையும் அறம் செய்தவர் ஸ்வாமி. ‘‘அம்பரம் வ்யோம வஸ்த்ரயோ’’ என்ற நிகண்டின்படி அம்பரமாவது ஆகாசம்; பரமாகாச மெனப்

படுகிற பரமபதம். அதையும், விரஜையாகிற தண்ணீரையும், *அந்தம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத்* என்று உபநிஷத்தில் அன்னமாகச் சொல்லப்பட்ட பரப்ரஹ்மாநுபவத்தையும், **அறஞ்செய்யுமெம் பெருமான்**—க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராய் உபகரித்தருளினவர். மேலே 'அம்பரமூடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர்கோமான்' என்றதும் எம்பெருமானாரை நன்கு நினைவூட்டும். ஆளவந்தாருடைய சரம திருமேனியை ஸ்வாமி ஸேவிக்கப்பெற்ற போது ''ஆளவந்தாரோடே நான் சேர்ந்து வாழப் பெறில் பரமபதத்திற்கும் படிகட்டி விருப்பேனே!'' என்று ஸ்வாமி பணித்ததாக ப்ரஸித்தி. ஆளவந்தாரோடே சேர்ந்து வாழப் பெருமற் போனாலும் *யத்பதாபபோருஹத்யாந ச்லோகப்படியும் ''ஏகலவ்யனன்றோ நான்'' என்ற ஸூக்திப்படியும் அவருடைய விலக்ஷணாநுக்ரஹபாத்ரமா யிருக்கப்பெற்ற பெருமையினால் நித்யவிபூதிக்கும் லீலா விபூதிக்கும் இடைச் சுவர் தள்ளி உபய விபூதிக்கும் ஒரு போகி யாக்கினவர் நம் ஸ்வாமியென்று ப்ரஸித்தமாயிற்று. ''மதுரகவி சொன்ன சொல் நம்புவார்பதி வைகுந்தங் காண்மினே'' என்ற விடத்து வியாக்யானத்தில் உபய விபூதிக்கும் இடைச் சுவர் தள்ளின பெருமை பட்டருடையதாக அருளிச் செய்யப் பட்டிருந்தாலும் அப்பெருமை ஸ்வாமிக்கு கிப்புநர்ந்யாய ஸித்தமே. அம்பரத்தை, பரமாகாசத்தை, ஊடறுத்தவர் என்றதாயிற்று.

## 18. உந்துமதகளிற்றன்

இப்பாசுரம் மூலமாகவே ஸ்வாமிக்குத் திருப்பாவை ஜீயரென்று வ்யபதேச முண்டாயிற்றென்று ப்ரஸித்தமாதலால் இங்கு நாம் வேறு எதுவும் விவரிக்கவேண்டியதில்லை. ஆனாலும் கீழும் மேலுள்ள விவரணங்களுக்குச் சேர இங்குமொன்றுரைப்போம். **கந்தங்கமழுங்குழலீ!** என்று கேசபாசத்தை யிட்டுச் சொன்னது ஸ்வாமியின் திருவுள்ளத்திற்கு மிகவுகப்பான ஸம்போதனமாம். மதாந்தரஸ்தர்களான



ஆண்டாள்



ஸ்ரீ ராமாநுஜர்

யதிகள் சிகையை வஹியாது முண்டனம் செய்து போரு வர்கள்; அங்ஙனன்றிக்கே 'காரிசுதன் கழல் சூடிய முடியும் கன நற்சிகை முடியும்'' என்றும் ''கமநீய சிகாநிவேசம்'' என்றும் ''சிகயா சேகரிணம் பதிம் யதிநாம்'' என்றும் நம் முதலிகள் உள் குழைந்து பேசும்படி கமநீய சிகாபந்தத்தோடு ஸ்வாமியின் ஸேவை ஸாதித்தவழகு நெஞ்சகுளிர அநுபவிக்கப் பட்டதாயிற்று

## 19. குத்து விளக்கேரிய

திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே எம்பெருமானார் பதி னெட்டு பர்யாயம் எழுந்தருளி ரஹஸ்யார்த்த விசேஷம் பெற்று அவ்விடத்திலேயே அதைச் சிலர்க்கு உபதேசித் தருளின இதிஹாஸம் இப்பாட்டில் நன்கு ஸூசிதமாகிறது. தோரண விளக்கு, குத்துவிளக்கு என்று இருவிளக்குண்டு. தோரணவிளக்கு ஸ்தாவரமாயிருக்கும் குத்துவிளக்கு ஜங்கமமாயிருக்கும். ஸ்வஸ்தானத்திலேயே ஸ்தாவரராக விருந்த திருக்கோட்டியூர் நம்பி தோரண விளக்காவர் பல கால கதாகதம் செய்தருளின எம்பெருமானார் குத்துவிக் காவர். இந்த குத்துவிளக்கு எரிய—நம்பிபக்கலிலே அர்த்த விசேஷம் கேட்டு ஜ்வலிக்க என்றபடி. [கோட்டு] ''ஏக தேச விக்ருதம் அநந்யவத் பவதி'' என்கிற வடமொழி வியாகரண முறையின்படி. கோட்டி என்றதாகக் கொள்க கோஷ்டீ என்னும் வட சொல் கோட்டியென்றுதானே இரியும். திருக் கோட்டியூரென்றதாயிற்று. அவ்விடத்திலே [கால் கட்டு] ரஹஸ்யார்த்த முபதேசித்தருளா நின்ற நம்பிகள் தம் திரு வடியைத் தொட்டு சபதம் செய்து கொடுக்கும்படி நியமித்தா ரன்றோ; அந்த கால்கட்டு ஸூசிதமாகிறது. [மேலேறி] ஏற்கெனவே தம்மை அநுவர்த்தித்துக் கொண்டிருந்த சில விலக்ஷணர்களுக்கு உபதேசிக்கத் திருவுள்ளம்பற்றிய ஸ்வாமி, ஸந்நிதியின் மேல்தளத்திலேறினபடியைக் காட்டுகிறது. இப்படி ஆசார்ய திவ்யாஜ்ஞையைக் கடந்து உபதேசித்திருப்

பரோ சாஸ்த்ர வச்யரான ஸ்வாமி? என்கிற சங்கைக்குப் பரி ஹாரம் செய்கிறது [மலர் மார்பா] என்னும் விளி. ஸ்வாமியி னுடைய ஹ்ருதய வைசால்யமே அதற்குக் காரணமென்று காட்டினபடி; மலர்ந்தஹ்ருதய முடையவரே! என்று விளித்த படி.

## 20. முப்பத்து மூவரமரர்க்கு

இப்பாட்டில் 'செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும் விமலா!' என்னும் விளிகள் ஸ்வாமிக்கு மிகவும் ஏற்றிருப்பவை. வட மொழியில் ஆர்ஜவமெனப் படும் குணம் தமிழில் செப்ப மெனப்படும். மநோவாக்காயங்களின் ஒற்றுமையாகிற கரண த்ரயஸாரூப்யமே ஆர்ஜவம்: அதுதான் செப்பம். ஸ்வாமியினுடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளை ஸேவிக்கும் போது ஒவ்வோரக்ஷரமும் அவருடைய ஆர்ஜவத்தையன்றோ தெரி விக்கின்றது. பரநிந்தை முதலியவற்றை நெஞ்சாலும் நினை யாமலும் வாக்கிலும் காட்டாமலுமிருந்த பெருமை ஸ்வாமிக்கும் ஸ்வாமியின் புநரவதார பூதரான மணவாள மாமுனிகளுக்கும் அஸாதாரணமன்றோ. [திறலுடையாய்!] திறலாவது பராபிபவந ஸாமர்த்தியம். நீறுபூத்த நெருப்புப் போலேயிருந்து இதர வாதிகளின் துர்வாதங்கள் தலையெடுக்க வொட்டாதபடி செய்தருளுமாற்றலும் ஸ்வாமிக்கு அஸாதாரணம். [செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும்] செற்று ராகிறார் ; எம்பெருமானுடைய பெருமையை ஸஹியாதே "குணிநமபி குணைஸ் தம் தரித்ராணம்—ஆஹு:" என்ற பட்டர் ஸ்ரீஸூக்திப்படியே அப்பெருமானை ஸர்வதரித்ரனாகப் பேசிவைத்தார்கள்; அவர்களுக்கு வெப்பம் கொடுத்தவர் ஸ்வாமி வெப்பமாவது ஜ்வரம், பீதி ஜ்வரம். *தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரம யோகிநே, ய:ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர் ஜ்வரமசீ சமத்* என்று ஸ்வாமி ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ரங்களுக்கிருந்த அந்தர் ஜ்வரத்தைப் போக்கி

கடித்ததாகச் சொல்லிற்று. அதை எங்கே போகவிட்டார் தெரியுமோ? செற்றாருடைய உள்ளத்திலே போக விட்டாராயிற்று. திருவடி இலங்கையைக் கொளுத்தினரே, எந்த நெருப்பைக் கொண்டு கொளுத்தினரென்று கேட்க, வாலில் அரக்கர் பற்ற வைத்த நெருப்பினுல் என்ருர்களாய்; அன்று அன்று; "சோகவஹ்நிம் ஜநகாத்மஜாயா: ஆதாய தேஜஸ்தவ ததாஹ லங்காம்" என்று, பிராட்டி திருவயிற்றிலே மண்டிக் கிடந்த சோகாக்னியை அங்கு நின்றும் கிளப்பி அதனுலேயே இலங்கையைக் கொளுத்தினரென்ருர் மர்மஜ்ஞர். அது போலவே யிங்கும் ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ரங்களின் அந்தர் ஜ்வரத்தையெடுத்துச் செற்ருர்வயிற்றி லெறிந்தபடி.

## 21. ஏற்றகலங்களெதிர் பொங்கிமீதளிப்ப

"வள்ளல் பெரும் பசுக்கள் ஆற்றப் படைத்தான்" என்னும்போது ஸ்வாமியின் பெருமை தவிர வேறு எதுவும் நினைவுக்கு வாராது. ஸ்வாமிக்கு முன்பிருந்த ஆசார்யர்களை யெடுத்துக் கொண்டு அவர்களுக்கு எத்தனை சிஷ்யர்கள்? என்று கேட்டால் இருவர் மூவர் நால்வர் ஐவர் என்ன வேண்டுமத்தனை. ஸ்வாமியின் சிஷ்யவர்க்கங்களைப் பற்றிக் கேட்டாலோ "ஏகாந்திநாம் த்வாதசபிஸ் ஸஹஸ்ரை: ஸம்ஸேவிதஸ் ஸம்யமிஸப்தசத்யா" என்ற உடனிருந்தவர்கள் பேசும்படியாயிருக்கும். அன்றியும், மஹாஜ்ஞான நிதிகளாகத் தேர்ந்தெடுத்து எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளென்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தாம் எப்படிப் பட்டவர்களென்னில்? (ஏற்றகலங்கள்) ஆசார்ய ஸார்வபௌமர்க்கு ஏற்றிருக்குந் தன்மையையுடைய ஸத்பாத்ரபூதர்களான ஸச்சிஷ்யர்கள். பின்னையும் எப்படிப் பட்டவர்களென்னில், (எதிர்பொங்கி மீதளிப்ப) "சிஷ்யாதிச்சேத் பராஜயம்" என்னும்படிஆசார்யரையும் விஞ்சினவர்களாயிருப்பர்கள். காச்மீரத்தில் சாரதாபீடத்தில் ஸ்வாமியும் ஆழ்வானும் போதாயநவ்ருத்தியைக் கடாக்ஷியா நிற்க

அதற்கு இடையூறு விளைந்தபோது 'க்ரந்தத்தைப் பூர்த்தியாகப் பார்க்க முடியவில்லையே!' என்று ஸ்வாமி க்லேசிக்க, அந்த வ்ருத்திக்ரந்தத்தைப் பூர்த்தியாகக் கடாக்ஷித்து அத்தனையும் ஸ்ருதி தரித்துக் கொண்டிருந்த ஆழ்வான் "இங்கே விண்ணப்பஞ் செய்யவோ? இரண்டாற்றின் நடுவே விண்ணப்பஞ் செய்யவோ?" என்று பணித்தாரென்று ப்ரஸித்தம். இப்படியே யன்றோ மேன்மேலுமுள்ள சிஷ்ய வர்க்கங்களின் சரித்திரமும். அவர்கள் இன்னமும் எப்படிப் பட்டவர்களென்னில்; (மாற்றாதே பால் சொரியும்) அவ்வாசாரியர்களின் பரம்பரை பெரும்பாலும் அநுஸ்யூதமாக நிகழ்ந்து வந்து பால் போன்ற அர்த்த விசேஷங்களைச் சொரிந்து கொண்டிருக்கும்படி சொன்னவாறு. இத்தகைய வள்ளல் பெரும்பசுக்களை ஆற்றப் படைத்தவர் ஸ்வாமி. ஆற்ற- அபரிமிதமாக. மேலே "மாற்றாருனக்கு வலி தொலைந்து உன் வாசற்கண்" என்ற விடத்து யாதவப்ரகாசர் வந்து பணிந்த வ்ருத்தாந்தம் மிகப்பொருத்தம்.

## 22. அங்கண்மா ஞாலத்தரசர்

"திங்களுமாதித்தியனு மெழுந்தாற்போல் அங்கணிரண்டுங் கொண்டு" என்றதில் ஸ்வாமியினுடைய உபயவேதாந்த க்ரந்தப்ரவசந படுத்வம் பேசப்படுகிறது. திங்களும் ஆதித்தியனும் ஏககாலத்தில் எழுவது அஸம்பாவிதம். ஆதித்யனெழும்போது தீக்ஷ்ணதையும், திங்கள் எழும்போது தண்ணளியும் அநுபவிக்கலாயிருக்கும். உபய வேதாந்தப்ரவர்த்தகரான ஸ்வாமி காலை வேளைகளில் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் ஸாதிப்பதும், மாலை வேளைகளில் அருளிச்செயல் (பகவத் விஷய) காலக்ஷேபம் ஸாதிப்பதுமாயிருப்பர். மதாந்தர ப்ரத்யாக்யாநதத்பரமான ஸ்ரீபாஷ்யத்தின் அர்த்தங்கள் அநுபவிக்கப்படும்போது தீக்ஷ்ணதையும் "செவிக்கினிய செஞ்சொல்" "ஈச்ரசொல்" என்ன நின்ற அருளிச்செயல்களின் அர்த்தங்கள் அநுபவிக்கப்படும்போது ஸௌம்யதையும் காணலா

யிருக்கும். இரண்டிலுமிரண்டுமுண்டானாலும், ''இப்படிச் சொல்லுகிறதும் ஊற்றத்தைப் பற்றி'' என்ற ஸ்ரீவசந பூஷணப்ரக்ரியையிலே கொள்ளக் கடவது. மேலே* அங்கணிரண்டுங் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்* என்றவிடத்திலும் உபய வேதாந்தப் பொருள்களையும் எங்களுக்குக் கடாக்ஷிதருள வேணுமென்ற பிரார்த்தனையுள்ளது. ''சக்ஷுஷ்மந்தா து சாஸ்த்ரேண'' என்றபடி கண்ணென்பது சாஸ்த்ரமேயாம். உபய வேதாந்தங்களும் ஸ்வாமிக்கு இரண்டு திருக்கண்களென்க ஒன்றில் ஆதரமும் மற்றொன்றில் அநாதரமும் கொண்டிருக்கையே சாபமாகும். அது தொலைய வேணுமென்றவாறு. ஸ்வாமி பக்கலிலே சிஷ்யர்கள் பிரார்த்திப்பது இதுவே.

## 23. மாரிமலைமுழைஞ்சில்

''அறிவுற்றுத் தீவிழித்து வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்படும் சீரியசிங்கம்'' நம் யதிஸார்வபௌமஸிம்ஹம் தவிர வேறுண்டோ? நூற்றந்தாதியில் ''கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் கலைப் பெருமானொலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயமிராமாநுசன்'' என்று சீரிய சிங்கமாகச் சொல்லப்பட்டவர் ஸ்வாமி. உலகில் சிங்கம் ஹேயமானவுணவையுண்டு செருக்கியிருக்கும்; யதிராஜஸிம்ஹம் திருமங்கையாழ்வாருடைய திவ்யஸூக்திகளையுண்டு அதனால் தடித்திருக்குமென்கிறார் அமுதனார். இதற்கு மலையும் முழைஞ்சும் விலக்ஷணமாயிருக்கும். முந்நாளுண்டு வேதமோதின பரத்வாஜ மஹர்ஷிக்கு தேவேந்திரன் வேதங்களை மலையாகக் காட்டினனென்று வேதமே சொல்லுகையாலே வேதமே மலையாகக் கொள்ளவுரியது. அதில் முழைஞ்சாவது *தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம்* என்னும்படி தர்மஸூக்ஷ்மங்கள் பொதிந்திருக்குமிடம் அதிலே மன்னிக்கிடந்து லௌகிக விஷயங்களில் திருக்கண்செலுத்தாதே *ஆத்மந்யேவ ஆத்மாநம் பச்யந் ஸுகித்திருப்பவர் ஸ்வாமி (அறிவுற்று) நாம்

அவதரித்தது எதற்காக? என்று தம் அவதாரப்ப்ரயோஜனத்தைக் குறிக்கொண்டு என்றபடி. (தீவிழித்து) (அமரகோசே) *புத்திர்மநீஷா திஷணா தீ:* என்ற விடத்து புத்திபர்யாயமாகப் படிக்கப்பட்ட (தீ:) என்பது இங்குத் தியென நிற்கின்றது. அது விழித்திருப்பது—விசலித்திருப்பது ஸ்வாமிக்கே யென்க, [எப்பாடும் பேர்ந்து உதறி.] ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரிஸிம்ஹாசலௌ ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ்ச பத்ரீ நாராயணம் நைமிசம், ஸ்ரீமத்த்வாரவதிப்ரயாக மதுரா யோத்யா கயா புஷ்கரம் ஸாளக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி.* என்கிறபடியே எண்டிசையும் பாதசாரத்தாலே ஸஞ்சரித்து, ஆங்காங்கு விபக்ஷர்களுண்டாகில் அவர்களை உதறியருளவர் ஸ்வாமி...*

## 24. அன்றிவ்வுலகமளந்தாய்

இதில் "வென்று பகைகெடுக்கும் நின் கையில் வேல் போற்றி" என்றதை உயிராகக் கொள்க. கொல்வது கோல் என்னுமாபோலே வெல்வது வேல் எனப்படும். கண்ணபிரான் திருக்கையில் வேலாகச் சொல்லப்படுவது திருவாழியாழ்வான். ஸ்வாமி திருக்கையில் வேலாகச் சொல்லப்படுவது த்ரிதண்டம். ஸப்ததியில் "விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:" என்று, சேனையர்கோன் ஸ்வாமியாகத் திருவவதரிக்க, உபயவிபூதி நிர்வாஹ நிபுணமாய் அவருடைய திருக்கையிலுள்ள திருப்பிரம்புதானே த்ரிதண்டமாயிற்று என்னப்பட்டது. அந்தத்திருப்பிரம்புக்கு எவ்வளவு சக்தியோ அவ்வளவும் ஸ்வாமியின் த்ரிண்டத்துக்கு முண்டென்க. தாடிபஞ்சகத்தில் ஸ்வாமிக்குப் பேசவேண்டிய பெருமைகளெல்லாம் த்ரிதண்டத்தின் மேலும் யஜ்ஞஸூத்ரத்தின் மேலும் ஏறிட்டுப் பேசப்பட்டுள்ளன. அங்ஙனம் பேசுகையில் "பாஷண்டஷண்ட கிரிகண்டந வஜ்ரதண்டா:-ராமாநுஜஸ்ய விலஸந்தி முநேஸ் த்ரிதண்டா:" என்றும், தத்தே ராமாநுஜார்ய: ப்ரதிகதக சிரோ வஜ்ரதண்டம் த்ரிதண்டம்"

என்றும் பேசப் பட்டதுண்டே, அதுதான் வென்று பகை கெடுக்குமென்றதற்கு விவரணம். அப்படிப்பட்ட கையிலே வேலாகிய முக்கோலுக்கு மங்களாசாஸனம் செய்தது முக்கோல் பிடித்த முனிக்கே மங்களாசாஸனம் செய்தபடியா மென்றுணர்க.

## 25. ஒருத்திமகனாய்ப் பிறந்து

*தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த கஞ்சன் கருத்தைப் பிழைப்பித்து அவன் வயிற்றில் நெருப்பென்ன நின்றவர் ஸ்வாமி. கம்ஸன் கண்ணனிடத்திலே அனர்த்தம் விளைக்க வழிதேடியிருந்தது போல நம் ஸ்வாமிக்கு அனர்த்தம் விளைக்க வழிதேடியிருந்தவர் ஒருவர் ப்ரஸித்தர். அவருடைய கருத்தை பிழைப்பித்து [தடைபடச் செய்து] ஓரிரவில் ஒளித்து வளர்ந்தவர் ஸ்வாமி. விந்த்யாடவியெங்கே! ஸத்யவ்ரத க்ஷேத்ரமெங்கே! ஓரிரவில் அங்கு நின்றும் இங்கு வந்து சேர்ந்தவர் தம் ப்ரபாவங்களையெல்லாம் ஒளித்து வைத்திருந்தாரத்தனையன்றோ. அன்னவர் ஆஸுர ப்ரக்ருதிகளின் வயிற்றில் நெருப்பென்ன நின்றார். "பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந." "பாஷண்ட ஸாகர மஹாபடபாமுகாக்நி:" என்று நெருப்பாகவேயன்றோ பேசப்பட்டார் ஸ்வாமி. [நெடுமால்] வியாமோஹம் கொண்டவர் "அச்யுதபதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹத:" என்ற ஸ்வாமி தனியன் காண்க.

## 26. மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்

இதில் *ஆலினிலையாய்!* என்ற விளி இன்சுவை மிக்கது. *ஆலின் இலையதன்மேல் பையவுயோகு துயில்கொண்ட பரம்பரன் கண்ணன். [ஆலின் இலையாய்!] ஆலமரத்தின் நிலைமை போன்ற நிலைமையுடையவர் ஸ்வாமி. எம்பெருமான் "பாஹுச்சாயா மவஷ்டப்தோயஸ்ய லோகோ மஹாத்மந:" என்கிறபடியே தன் பாஹுச்சாயையிலே ஒதுங்கினவர்களுக்கு

நிழல்கொடுத்துத் தாபம் தீர்ப்பவன். ஸ்வாமியோ வென்னில் 'டராப்தா நாம் பாதமூலம் ப்ரக்ருதி மதுராயா ச்சாயயா தாப ஸ்ம்ருத் வ:'' என்னும்போலே அடிபணிந்தார்க்குத் திருவடி நிழல் கொடுத்துத் தாபம் தணிப்பவர். இதுதானே ஆலின் நிலைமை, நூற்றந்தாதி தொடங்கும்போதே ''பல்கலையோர் தாம் மன்னவந்த விராமாநுசன் சரணாரவிந்தம்'' என்றன்றோ தொடங்கிற்று. *பல்கலையோர் தாம் மன்ன வந்த* என்ற விசேஷணத்தை இராமாநுசனுக்கு ஆக்குவது போலவே அவருடைய சரணாரவிந்தத்திற்குமாக்கலாமே. ''ந்யக் ரோதோ பஹுபாத் வட:'' என்ற அமரகோசம் ஆலமரத் திற்கு பஹுபாத் என்று பெயர் படித்தது. உண்மையில் ஆல மரமானது மற்ற மரங்களைப் போலன்றிக்கே அபரிமிதமான பாதங்களை யுடைத்தாயிருக்கும். ஸ்வாமிக்கும் திருவடிகள் அபரிமிதங்கள். சிஷ்யர்களே திருவடிகள். இப்பாட்டில் சொன்ன 'சங்கம், பெரும்பறை, பல்லாண்டிசைப்பார், கோல விளக்கு, கொடி, விதானம்' என்னுஞ் சொற்களை வன்றி நோக்கினால் இவையெல்லாம் ஸ்வாமியே யென்னப் பொருந்தும். [சங்கம்] துருவனிடஞ் சென்ற பகவான் சங்கஸ் பர்சத்தினால் அவனை ஸர்வஜ்ஞனாக்கினதாகப் புராணங் கூறும்; அதுபோல, ஸ்வஸம்பந்தத்தாலே ஆழ்வான் ஆண்டான் அனந்தாழ்வான் எம்பார் பிள்ளான் முதலானாரை ஸர்வஜ் ஞராக்கினவர் ஸ்வாமி. (பறை) பகவத் குணங்களை எங்கும் பறை சாற்றினவராகையாலே தாமே பறையென்னத் தகுவர். (பல்லாண்டிசைப்பார்) பெரியாழ்வார்போலே எம்பெரு மானுக்குத் தாம் பல்லாண்டு பாடினது மட்டுமன்றியே பல்லாயிரவரைப் பாடுவிக்கவும் வல்லராயிருந்தார். (கோல விளக்கு) ஸ்ரீ வைஷ்ணவ குல ப்ரதிபமாயிருந்தவர். (கொடி) 'ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜ' மென்று பிறரைச் சொல்லும்போது ஸ்வாமிக்குச் சொல்லவேணுமோ? விசிஷ்டாத்வைத ஸித்தாந்த விஜயத்வஜமென்க. (விதானம்) கண்ணன் வடமதுரையிலிருந்து திருவாய்ப்பாடிக் கெழுந் தருளும்போது "தொடுத்து மேல் விதானமாய பௌவநீர

ராவணை' என்ற திருச்சந்த விருத்தத்தின்படியே விதானமாயிருந்தவர் ஆதிசேஷனான திருவனந்தாழ்வான்; அவரேயன்றோ ஸ்வாமியாக வடிவெடுத்தார்

## 27. கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா!

யஜ்ஞமூர்த்தி போல்வாரான பல பல அத்வைதிகள் முதலிலே ஸ்வாமியோடு எதிரம்பு கோப்பவர்களாய் [கூடாதவர்களாய்] இருந்து பிறகு கூடினவர்களாய் ஸ்வாமிக்கு வெற்றியைத் தந்தார்கள். அவர்களை வெல்வதற்கு உறுப்பாயிருந்த சீர்களை யுடையவர் ஸ்வாமி. அந்தச் சீர்கள் எவையென்னில்; கேவலம் வைதுஷ்யம் மட்டுமல்ல; திவ்ய மங்கள விக்ரஹ குணங்களும், திவ்யாத்ம குணங்களும் பல பல. ஸ்வாமியின் வடிவழகை ஸேவித்த மாத்திரத்திலேயே யீடுபட்டவர்கள் பல பலர். (கோவிந்தா) பசுக்களை மேய்ப்பதனாலே கண்ணன் கோவிந்தனாயின், ஸ்ரீஸூக்திகளும் கோசப்தார்த்தமென்று கீழே காட்டிறே மாகையாலே ஸகலப்ரமாணங்களையும் ''பிபேத்யல்பச்ருதாத் வேதா மாமயம் ப்ரதரிஷ்யதி'' என்னும்படியான பீதியைப் போக்கி ரக்ஷித்தமையாலே ஸ்வாமியும் கோவிந்தர். பசுப்ராயர்களான நம்மைக்காத்தவரென்றுமாம்.

## 28. கறவைகள் பின்சென்று

''குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்'' என்னும் வார்த்தை ஸ்வாமியெம்பெருமானாரை நோக்கி ஸ்ரீவைஷ்ணவ குலத்தவர்கள் யாவரும் சொல்லத் தக்கது. ஞானம் அனுட்டானம் பரஸம்ருத்த்யேக ப்ரயோஜநத்வம் ஆகிய மூன்றும் ஆசார்யபீடஸ்தர்களுக்கு அவச்யாபேக்ஷிதங்கள். ஞானமிருந்து அநுஷ்டானமில்லையானாலும் பயனில்லை; அநுஷ்டானமிருந்து ஞானமில்லையாயினும் பயனில்லை. இவையிரண்டு மிருக்கவேணு

மென்பர்; இவையிரண்டு மிருந்தாலுங்கூட, பரஸம்ருத்தியே பெறுமிருக்கையில்லையாகில் பயனில்லை; இவைமூன்றும் நன்கு நிறையப்பெற்றவர் ஸ்வாமியே, குறையில்லாத—குறையொன்றில்லாத— குறையொன்று மில்லாத என்று யோஜித்து மேற்சொன்ன மூன்றாலும் குறையற்றிருப்பவர் ஸ்வாமியே யென்று கொள்வது. கூரத்தாழ்வான் ஸ்வாமிக்கிட்ட தனியுவில் "தயைகஸிந்தோ:" என்று விசேஷணமிட்டது பரஸம்ருத்தியேகப்ரயோஜநத்வத்தையே காட்டினபடி. இத்தகைய பெருமைவாய்ந்த ஸ்வாமி நமக்குக் குல கூடஸ்தராகித் திருவவதரிக்கப்பெற்றது வாசாமகோசரமான நமது பெரும் பாக்கியமன்றோ. த்வீபாந்தரங்களிற் பிறவாதே மானிடப் பிறவியிற் பிறந்தது. அதிலும் பகவத்பாகவத பக்தி முதலியவற்றுக்கு நிலமல்லாத மநுஷ்யவர்க்கத்தில் பிறவாதே ஆஸ்திக குடும்பத்தில் பிறந்தது. இவையெல்லாவற்றுக்கும் மேற்படவன்றோ "ததநுபந்த மதாவலிப்தே" என்று பேரறிவாளர் பேசும்படியான பெருமை வாய்ந்த எம்பெருமானார் திருவடி ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீவைஷ்ணவஸந்தானத்திலே நாம் பிறக்கப்பெற்றது இந்த ஹர்ஷப்ரகர்ஷத்தைக் காட்டுவதாம் *உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோமென்பது. உன்றன்னை யென்பதற்கு 'உன்றன்னைக்கொண்டு' என்று பொருள் கொள்வது மிகச் சிறக்கும். உன்றன்னால் என்றபடி. (உருபுமயக்கம்.) *ஸஹி வித்யாதஸ் தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜந்ம* என்கிறபடியே நாங்கள் ச்ரேஷ்டமான வித்யாஜந்மத்தை தேவரீர் திருவருளாலன்றோ பெற்றிருக்கிறோம். 'யதீச்வர ஸரஸ்வதீஸுர பிதாசயா நாம் ஸதாம் வஹாமி சரணாம்புஜம் ப்ரணதிசாலிநா மௌலிநா" என்று மஹாசார்யர்கள் ஆசைபடுதற்குறுப்பானார் திரளிலேயன்றோ ஜனித்திருக்கிறோமென்றவாறு. ஸ்வாமி திருவம்சத்திலே நாம் பிறக்கப்பெற்றது, நம் குலவிளக்காக ஸ்வாமி அவதரிக்கப்பெற்றது ஆகிய இரண்டும் இங்கு விவக்ஷிதமென்க.

## 29. சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச்சேவித்து

*எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோ டுற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய்வோமென்பது நாமெல்லோரும் ஸ்வாமியை நோக்கியே சொல்லத் தகுந்த வார்த்தை. ஆழ்வார்கள் *இருள் தருமா ஞாலத்துளினிப் பிறவி யான் வேண்டேனென்றும், *இயக்கறுத பல்பிறப்பிலென்னை மாற்றியென்றும் *ஆதலால் பிறவி வேண்டேனென்றும் புநர் ஜன்மத்தை வெறுத்துப் பேசுவர்கள். நாம் அப்படி வெறுக்க வேண்டா: எத்தனை ஜன்மங்களும் யதேஷ்டமாக நேரட்டும்; நேருகிற ஜன்மங்கள் தோறும் இப்போது நமக்கு வாய்த்திருப்பது போலவே எம்பெருமானார் திவ்யஸூக்தி ஸுதைகளை பருகும் பாக்கியம் வாய்த்திடுமானல் பிறவியில் வெறுப்பு நமக்கேதுக்கு? ஒரு பிறப்பன்று, ஒன்பதினாயிரம் பிறப்புமெடுப்போமாக. அதற்குச் சளைப்போமல்லோம்; ஆனல் அப்பிறவி தோறும் [உன்றன்னோடுற்றோமேயாவோம்] 'இராமானுச அடியார்' என்னும விருதுக்கு லோபமின்றிக்கே யிருக்கக் கடவோம். [உனக்கே நாம் ஆட்செய்வோம்] "வடுக நம்பி ஆழ்வானையு மாண்டானையும் இருகையரென்பர்" என்கிற ஸ்ரீவசநபூஷண ஸூக்தியின்படியே இருகரையரராகாமே வடுக நம்பியைப் போலே ஸ்வாமிக்கே அடிமை செய்து கொண்டிருக்கக் கடவோம். ஆனல் 'வாழி யெதிராசன், வாழியெதிராசன் வாழி யெதிராசனென வாழ்த்துவார், வாழியென வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார் தாளிணையின் தாழ்த்துவார் விண்ணோர்தலை" என்று மாமுனி களருளிச் செய்தபடியே நமக்குப் புநர்ஜன்ம மின்றிக்கே முக்தி லாம் ராஜ்யம் ப்ராப்தமாய்விடுமானலும் *ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின்போவதே* என்கிற திருமங்கையாழ் வாரநுஸந்தானமே யாயிருக்கக் கடவோம். *கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித் தரிலும், உன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்* என்ற அமுதனாரநுஸந்தானமே உறைந்திருக்கக் கடவது நமக்கு.

## 30. வங்கக்கடல் கடைந்த மாதவனை

திருப்பாவை முப்பதுக்கும் வங்கக் கடல் கடைந்த மாதவன் தான் லக்ஷ்யபூதன் கண்ணபிரானை லக்ஷ்ய பூதனாகக் கொள்ளுமவர்கள் தேவர்களின் பிரார்த்தனையினால் கடலைக் கடைந்து அமுதங் கொடுத்து "பலேக்ரஹிர்ஹி கமலாலாபேந ஸர்வச் ச்ரம;" என்று பட்டரருளிச் செய்தபடியே பிராட்டியையும் பெற்று மகிழ்ந்த எம்பெருமானைப் பொருளாகக் கொள்க. திருப்பாவை ஜீயரென்ற திருநாமத்திற் கேற்ப எம்பெருமானாரையே திருப்பாவைக்கு லக்ஷ்ய பூதராகக் கொள்ளுமவர்கள் இங்ஙனே பொருள் காண்க;—*நிர்மத்ய ச்ருதி ஸாகராத்* என்றும் *தமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்* என்றும் கடலாகச் சொல்லப்பட்ட ஸம்ஸ்க்ருத த்ராவிட உபய வேதங்களையும் *திருநாவின் மந்தரத்தால் கடைந்து 'வசஸ்ஸுதாம்.. ஸுமநஸோ பௌமா1 பிபந்த்வந்வஹம்'' என்று ஸ்வாமி தாமே யருளிச்செய்தபடி நிலத்தேவர்கள் நித்யாநுபவம் பண்ண அமுதமளித்தவர் ஸ்வாமி. (மாதவனை) மா—மஹத்தான, தவனை—தவத்தை [தபஸ்ஸை] யுடையவரை; மஹாதபஸ்வியை யென்றபடி தபஸ்விகளில் தலைவரன்றோ ஸ்வாமி எம்பெருமானார் [இங்கு இப்பரிசுரைப்பார்] இங்ஙனே முப்பது பாசுரங்களுக்கும் நாம் காட்டின நிர்வாஹமும் *அணிபுதுவைப் பைங்கமலத் தண்டெரியல் பட்டர்பிரான் கோதை திருவுள்ள முகந்ததேயென்று கொண்டு உபந்யாஸ கோஷ்டிகளிலெடுத்துரைக்குமவர்கள் *செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலா லெங்குந் திருவருள் பெற்று இன்புறுவர்"—*பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து என்ற பெரியாழ்வாரருளிச் செயலின்படியும் *ஸா மூர்த்திர் முரமர்தநஸ்ய ஜயதி* என்ற ஸப்ததிஸூக்திப்படியும் ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனவதாரமான எம்பெருமானாருடைய திருவருளை எங்கும் பெற்று *அம்ருதஸாகராந்தர் நிமக்ந ஸர்வாவயவாஸ் ஸுகமாஸீரந்* என்று தலைக்காட்டிற்றாயிற்று.

**இத்தமண்ணங்கரார்யேண லிகிதா விவ்ருதிஸ் ஸதாம்,**
**கோதாயதீந்த்ரபக்தாநாம் ஹ்ருதி வித்யோததாம் ஸதா.**

திருப்பாவை ஜீயர் திருவடிகளே சரணம்.

—— ——

# மற்றதெய்வங்கள் ஏன்?

இவ்வுலகிலே பற்பலராலும் வணங்கப்படும் பல தெய்வங்களையும் உலகையும் படைத்தவன் ஸ்ரீமந்நாராயணன். அவற்றிற்கு ஆபத்து வந்தபோது விழுங்கி, வயிற்றிலே வைத்துக் காத்தவனும் அவனே. இதனை நம்மாழ்வார் "பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து அன்று உடனே விழுங்கி கரந்து, உமிழ்ந்து, கடந்து" என்கிறார். இப்படிப் பல்வகையாலும் தானே மேலான பரம்பொருள் என்று உணர்த்திய பரவாசுதேவன் இவ்வுலகிலுள்ளோர் அனைவரும் என்னையே தொழுது தன்னையே வந்து அடையும்படி செய்யாமல் வேறுபல தெய்வங்களையும் படைத்தது எதற்காக? அச்சிறு தெய்வங்களையும் உலகிலுள்ளோர் தொழும்படி செய்தது எதற்காக?

---

## திருமாலடியான்

---

இதற்கான விடையை நம்மாழ்வார் அளிக்கிறார். 'போற்றி மற்றோர் தெய்வம் பேணப்புறத்திட்டு, உம்மையின்னே தேற்றி வைத்தது, எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லை யென்றே' என்பது அவர் திருவாக்கு. இதற்கு மேம்போக்காகப் பொருள் கூறும் சிலர்—எல்லோரும் தன்னையே தொழுது மோட்சமடைந்து விட்டால் இவ்வுலகு வெற்றிடமாகி விடும் என்பதற்காக வேறு பல தெய்வங்களை உலகில் படைத்து, உலகோர் அத்தெய்வங்களைத் தொழுதுகொண்டு தன்னிடம் வராமல் இருக்கும்படி செய்து விடுகிறான் பகவான்—என்று கூறுவர். இது முற்றிலும் தவறு.

முழுமுதற் கடவுளான என் ஒருவனையே சரணமாகப் பற்று—மாமேகம் சரணம் வ்ரஜ—என்று கூறியவன், பிற

தெய்வங்களைப்படைத்து அவர்களையும் சரணமடையும்படி செய்வானேன்? பின் மற்றதெய்வங்களையும் அவர்களுக்கு வழி பாடுகளையும் உண்டாக்கினது எதற்காக?

உலகில் பிறந்தோர் அனைவரும் தத்தம் பாவபுண்ணியங் களின் பலனை அனுபவித்தே தீரவேண்டும் என்பது சாத்திரம் அவரவர் கரும வினைகளுக்கேற்ப பற்பல பிறவிகளை எடுத்துத் தான் அப்பலன்களை அனுபவிக்க வேண்டும் மேலும புண்ணியம் செய்தவர்களுககும் பாவம் செய்தவர்களுக்கும் ஒரே மாதிரியான பலனைக்கொடுக்க முடியாது எனவே அவரவர்கள் தத்தம் கருமபலனை அனுபவிப்பதற்காக அவர்களை சம்சாரக் கடலில் தள்ளிப் பிறதெய்வங்களை வழி படவும் செய்திருககிறான் திருமால் அதாவது பிறதெய் வங்களை வழிபடுவது, மீண்டும் மீண்டும் இவ்வுலகில் பிறவி எடுக்கவே வழிசெய்கிறது திருமால் ஒருவனே பரம்பொருள் என்றுணர்ந்து அவனொருவனையே வழிபட்டால் வீடுபேற டைவது நிச்சயம். இதனையும் நம்மாழ்வார் ஓடியோடிப் பல பிறப்பும் பிறந்து மற்றோர் தெய்வம் பாடியாடிப் பணிந்து பல் படிகால் வழியேறிக் கண்டீர்—ஆடு புட்கொடி ஆதிமூர்த்திக்கு அடிமை புகுவதுவே' என்ற பாசுரத்தில் விளக்கியுள்ளார்.

சாத்திர மரியாதை காப்பாற்றப்படவும் அவரவர் விதிவழி பாவபுண்ணியத்தை அனுபவிக்கவும் உலகிலிருத்தினனே தவிர, உலகம் வெற்றிடமாகிவிடுமே என்பதற்காக அல்ல என்ற உட்பொருள் அறியத்தக்கதாகும்.

மேலும் ஸ்ரீமந்நாராயணனொருவனையே வழிபடுவதுதான் உய்யும் வழி; மற்ற தெய்வங்களை வழிபடுவது மீண்டும் மீண்டும் சம்சாரமாகிற துன்பக்கடலில் அழுந்துவதற்கே வழி என்பதையும் உணர வேண்டும்

———

நாடக விமரிசனம்

வேலூர் இளங்கோ நாடகமன்றத்தினர் ஸ்ரீராமானுஜர் வாழ்க்கை வரலாற்றை 'எம்பெருமானார் தரிசனம்'' என்ற பெயரில் நாடகமாக்கி 5-12-80 அன்று சென்னையில் அரங்கேற்றினர்.

நாடகக்கலையே நசித்து வரும் இந்நாளில் தைரியமாக, பிரம்மாண்டமான ஒரு புதுநாடகத்தை, அதுவும் எம்பெருமானார் வரலாற்றை நாடகமாக்கியிருக்கும் துணிச்சலுக்கு முதலில் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கிறோம்.

நாடகங்களில் இருவகையுண்டு. மிகவும் தரக்குறைவான விஷயங்களும் சிறந்தமுறையில் தயாராக்கப் படுவதன் மூலம் நல்ல நாடகமாகி விடும், மட்டமான முறையில் தயாரிக்கப் படும் நாடகமும், நல்லவிஷயங்களைக் கொண்டிருந்தால் நல்ல நாடகமாகிவிடும். ஆனால் இந்நாடகம் இரண்டு சிறப்புக்களையும் ஒருங்கே கொண்டு சிறப்பான முறையில் அமைந்துள்ளது.

திவ்யப்ரபந்த பாசுரங்களைக் கொண்டே இந்நாடகத்தின் வசனங்களை அமைத்திருப்பது அருமையிலும் அருமை. ஸம்ப்ரதாய விஷயங்களை நன்குஅறிந்த ஒருவர் இந்நாடகத்தை உருவாக்கி இருக்கிறார் என்பது ஆங்காங்கே வெளிப்படுகிறது.

பல அரிய ஐதிஹ்யங்களை யெல்லாம் துருவி ஆராய்ந்து இந்நாடகத்தில் புகுத்தியுள்ளனர். உதரணமாக நம்மாழ்வாருடைய பெயர்களை தன்மகனுக்கு இட்டுள்ள வண்ணானின் கதை ஒன்று; மோட்சத்திற்குப்போக எம்பெருமானாரிடம் சீட்டு கேட்ட ஆய்ச்சியினுடைய ஐதிஹ்யம் மற்றொன்று.

அவரவர்கள் புனைந்தபாத்திரத்திற்கேற்ப நடிகர்களுடைய தோற்றம் அமைந்திருந்தது மற்றொரு சிறப்பான அம்சம்,

உதாரணமாக ராமானுஜர், உறங்காவில்லி, பாதுஷா, யாதவப்பிரகாசர், ஆகிய பாத்திரங்களை ஏற்றவர்களைச் சொல்லலாம், அவர்கள் நடித்தார்கள்'என்று சொல்வது பிசகு. குறிப்பாக பாதுஷாவாக நடித்த கலைமாமணி கோவிந்தசாமி அவர்களைச் சொல்லலாம், நாடகத்தைத் தயாரித்து இயக்கி யிருப்பவரும் அவரே

ஓரிரு சிறிய குறைகள் தென்பட்டாலும், சிறந்த விஷய த்தை சிறந்த முறையில் நாடமாகத் தயாரித்து இயக்கி யிருக்கும் கலைமாமணி கோவிந்தசாமியவர்களுடைய சிறந்த முயற்சியை மீண்டுமொருமுறை பாராட்டுகிறோம் கலைத்துறை களில் வைணவம் புறக்கணிக்கப் பட்டுள்ள இந்நாளில் அவர் கள் செய்யும் பேருதவிக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

With compl ments from

★

J. M. BAXI & CO.

2/21, NORTH BEACH ROAD,

MADRAS - 600 001.

Phone : 20016 4 (lines)
Telex : 6_6 & 416

Post Box
Cobles : "BAXICO"

# திருநாமத்தின் சிறப்பியல்பு

"அறுசுவை அடிசில் என்கோ" என்கிறார் ஆழ்வார். அடிசில்—அன்னம். இதனை இறைவனுக்குப் பெயராக வழங்கியுள்ளார். இது போன்று தீயென்கோ வாயுவென்கோ என்றும் கூறியிருக்கிறார். எனவே இவை போன்றன யாவும் இறைவனுடைய உடைமைப் பொருள்கள் என்றும், இவற்றைத் தெரிவிக்கும் பெயர்கள் இறைவனுடைய பெயர்களாகின்றன என்றும் அறியலாம். ஆதலால், இவை பொதுப் பெயர்களாகும். பிற தெய்வங்களைக் குறிக்கும் பெயர்களும் அவனுடைய பெயர்களாகின்றன என்பதும் இது பற்றியேயாகும். நாராயணன், வாஸுதேவன், விஷ்ணு என்பன அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தைப் பற்றியவை. ஆதலால், இவை வியாபகநாமங்கள் என்று கூறப்படுகின்றன. ஏனைய நாமங்கள் அவனுடைய குணங்களையும் செயல்களையும் பற்றித் தெரிவித்தலால் அவை அவ்யாபக நாமங்கள் எனப்படுகின்றன. இவ்விரு வகை நாமங்களும் இறைவனுடைய சிறப்புப் பெயர்கள் எனப்படும் இவற்றின் இயல்புகள் இங்கு விவரிக்கப்படுகின்றன

---

R. வெங்கடராமாநுஜன்

---

இறைவனுக்கு நிவேதிக்கப்பட்ட அன்னம் தூய்மையுள்ளதாகும். அதனையுண்டார்க்கு அது மனத்தெளிவைத் தரும். தாரகமாயும் போக்யமாயுமிருக்கும். ஆயினும் ஒருவன் தன்னுடைய ஜீர்ண சக்தியின் அளவை அறிந்து உண்ணுதல் வேண்டும். அளவு மீறியுண்டால் அது நோய் செய்யும். இதனைக் கருத்திற்கொண்டே "அற்றால் அளவறிந்துண்க அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்குமாறு" என்று திருவள்ளுவனாரும் கூறியுள்ளார். பெறுதற்கரிய உடம்பு பெற்றவன்

பசித்தபின் அளவறிந்து உண்ணுதல் செய்யின், அது உடம்பை நீடித்திருக்கச் செய்யும் வழியாம் என்பது கருத்து. இது போலவே திருநாமங்களும் பாவனங்களாகவும் தாரகங்களாகவும் போக்யங்களாகவுமுள்ளன. திருநாமங்களைக் கற்றவர்க்குப் பாவங்கள் கழிகின்றன. அதனால் பாவனமாகின்றன. பாவனம் தூய்மையாக்குமது. "நமன்றமர் தலைகள் மீதே நாவலிட்டு உழிதருகின்றோம்" என்றவர் "நின் நாமங்கற்ற ஆவலிப்பு" என்று திருநாமங்களின் பாவனத் தன்மையை அருளிச் செய்திருப்பது காணலாம். "கோவிந்தன் குணம் பாடி ஆவிகாத்திருப்பேனே" என்று ஆண்டாள் அவற்றைத் தாரகமாக அருளியுள்ளாள். "அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே!" என்னும் இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவைபெறினும் வேண்டேன்" என்று தொண்டரடிப் பொடியாழ்வார், திருநாமங்களைப் போக்யங்களாகப் பேசியுள்ளார். எனவே, திருநாமங்களுக்குப் பாவனத்தன்மையும் தாரகத்தன்மையும் போக்யத்தன்மையும் உண்டு என்பதை அறிந்தோம். இவையே பிரிவாற்றுமை மிக்குள்ள காலத்தில் ஆழ்வார்களுக்குத் துன்பந் தரத்தக்கனவாகவும் அமைகின்றன.

'உயிர்க்கது காலனென் றும்மை யானிரந்தேற்கு, நீர்
குயிற்பைதல் காள்! கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்
தயிர்ப்பழஞ் சோற்றொடு பாலடிசிலும் தந்து, சொல்
பயிற்றிய நல்வளமூட்டினீர் பண்புடையீரே''.

என்ற பாடலில் தமக்குத் துன்பம் தந்தனவென்று திருநாமங்களைப் பற்றி ஆழ்வார் கூறியுள்ளதைக் காணலாம். எம்பெருமானை நினைவூட்டும் பொருள்களால் தலைமகள் தளர்ந்தமையைக் காட்டுவது "இன்னுயிர்ச் சேவல்" என்ற திருவாய்மொழி. இதில் எம்பெருமானுடைய திருநாமங்களும் அவனை நினைவுபடுத்தித் தம்மை வருத்திற்று என்பதைத் தெரிவித்துள்ளார்.

"கண்ணனுடைய திருநாமங்களைச் சொல்லாதீர் என்று உம்மையான் வேண்டியிருக்கச் செய்தேயும், நீவிர்! அவற்றையே சொல்லி என்னைத் துன்பப்படுத்தினீர். உங்களுக்குத் தயிரும் பழஞ்சோறும், பாலும் வெஞ்சோறும் உரியகாலங்களில் கொடுத்து வளர்த்தேன்; திருநாமங்களைக் கற்பித்தேன்; அதற்குக் கைமாறு பண்ணி விட்டீர் போலும்; சிறிதும் கருணையில்லாதவராயினீர்' என்று தான் வளர்த்த குயிற்பிள்ளைகளை நோக்கி வெறுத்துக் கொண்டாள் ஸ்ரீபராங்குச நாயகி. பரகாலநாயகியோ இவ்வண்ணம் இல்லாமல், எம்பெருமானுடைய திருநாமங்களை யெடுத்துக் கொடுத்தாள், அவற்றைச் சொல் என்றாள்; தன் கிளி சொல்லத் தொடங்கிற்று; அதனால் எம்பெருமானை நினைத்து அவனைப் பெறுமையால் உண்டான வருத்தம் மிக்கது; கண்ண நீர் மார்பகத்தில் வடியத் தலைப் பட்டது; மூர்ச்சையை அடைந்தாள் பரகாலநாயகி. இதனால் திருநாமங்கள் இவளை வருத்திற்று என்பது தெரிய வருகிறது. இவ்விஷயம் "கல்லெடுத்து" என்று தொடங்கும் திருநெடுந் தாண்டகப் பாசுரத்தால் அறியப்படுகிறது.

"கல்லெடுத்துக் கன்மாரி காத்தாய் என்னும்
காமரුபூங் கச்சி ஊரகத்தாய் என்னும்
வில்லிறுத்து மெல்லியல்தோள் தோய்ந்தாய் என்னும்
வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே என்னும்
மல்லடர்த்து மல்லரை அன்று அட்டாய் என்னும்
மாகீண்ட கைத்தலத்து என்மைந்தா என்னும்
சொல் எடுத்துத் தன்கிளியைச் சொல்லே என்று
துணை முலைமேல் துளி சோரச் சோர்கின்றாளே"

என்பது பாசுரம் இங்கே உள்ள 'சொல்எடுத்து' என்பது மேலேயுள்ள அடிகள் எல்லாவற்றோடும் சேர்க்கப்படும். எனவே, சொல் எடுத்து என்பதற்கு, சொற்களை எடுத்து என்று பொருள், 'கல் எடுத்துக் கல்மாரி காத்தாய், காமரு

பூங்கச்சி ஊரகத்தாய், வில்லிறுத்து மெல்லியல் தோள் தோய்ந்தாய், வெஃகாவில் துயில் அமர்ந்தவேந்தே, மல் அடர்த்து மல்லரை அன்று அட்டாய், மாகீண்டகைத் தலத்து என்மைந்தா என்னும் சொற்களை எடுத்துக் கொடுத்துத் தன் கிளியைச் சொல் என்று கூற அது கூறத்தொடங்கிற்று. அவற்றைக் கேட்டுக் கண்ணீர்விட்டு மூர்ச்சையுறுகின்றாள் என்கிறாள் தாய்.

கிளிக்குத் திருநாமங்களை எடுத்துத்தர வேண்டிய அவசியம் என்ன? தான்கற்பித்து வைத்திருநாமங்களைத் தானே எதற்காக எடுத்துத் தரவேண்டும் என்ற கேள்விபிறக்கலாம். 'ஆசார்யன் சொல்லிவைத்த திருநாமமாயினும் ஆசாரியன் முன்பு சிஷ்யன், தானே சொல்லலாகாது; ஆசாரியன் அத்திருநாமத்தை எடுத்துக் கொடுத்து இதனைச் சொல் என்று நியமித்தபின் சொல்லுதல் வேண்டும்'' என்ற சாஸ்த்ர முறை இங்குத் தோன்றுகிறது. திருநாமங்களைக் கேட்டால் தரித்திருப்பாள் என்று கருதினாள் தாய், உடனே திருநாமங்களைக் கற்பித்து வைத்த கிளியைத் தன்முன்னே கொண்டு வந்து விட்டாள். இவள் அந்தக் கிளியைக் குறித்துத் திருநாமங்களைச் சொல் என்றாள். அது பேசாதிருந்தது. ஆனால் நான் அத்திருநாமங்களை உச்சரித்தபின் நீ அவற்றை உச்சரிக்கலாமே என்று கூறி, உச்சரித்துக் காட்டினாள்; கிளியும் உச்சரித்தது; அவற்றைக்கேட்டு மயங்கினாள் என்பது இங்குப் போந்தபொருள். ஆசார்யன் உபதேசிக்கின்றபோது அவன் முன்னே மந்த்ரத்தைச் சொல்லுகின்றோம். அப்படியே எப்பொழுதும் அவன் உச்சரித்துக் காட்டிய பிறகே அவன் முன்னே நாம் உச்சரிக்க வேண்டும் என்பது இங்குப் புலனாவன காணலாம்.

கல்லையெடுத்தானைக் கச்சியுள் நின்றானை
வில்லை முறித்தானை வெஃகா விழைந்தானை
மல்லை யடர்த்தானை மாவாய் பிளந்தானைச்
சொல்லத் துணிந்தானைச் சோர்ந்தானைச் சொல்லுமினே ★

# கீதாசார்யன் பதில்கள்

S. கல்யாண வெங்கடராம ஐயங்கார், —உடுமலைப் பேட்டை,

கே: ஐயப்பனைத் தொழுவதற்காக கறுப்பு வேஷ்டி அணிந்து கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் சபரிமலைக்குப் போகிறார்களே! இது சரியா? தவறு எனில் ஏன் தவறு?

ப: ஒரு பதிவிரதையைப் போல, உண்மையான ஸ்ரீவைஷ்ணவன் மனத்தாலும் ஸ்ரீமந்நாராயணனைத் தவிர வேறு தெய்வத்தைத் தொழக்கூடாது என்பது ஸ்ரீவைஷ்ணவக் கோட்பாடு. விவரமான விளக்கத்திற்கு இவ்விதழில் வெளிவந்துள்ள ''மற்ற தெய்வங்கள் ஏன்'' என்ற கட்டுரையைப் படிக்கவும்.

கே: பெருமாள் ஸன்னிதிகளில் மூலவருக்கு அவன் அடியார்கள் அணியும் திருமண்காப்பை அணிவிக்கிறார்களே இது சரியா?

ப: பகவான் ஆடை அணிவதும் ஆணிகலன்கள் பூணுவதும் பக்தர்களின் மகிழ்ச்சிக்காகவே. தனக்கென்று எதுவும் தேவையில்லாதவன் அவன். அது போலவே பக்தர்கள் உகந்து அணியும் திருமண்காப்பைத் தானும் மகிழ்ச்சியுடன் அணிகிறான்.

# திருவகீந்திரபுரம்

**கண்ணன் :** பார்த்தா நாம் இப்போது இந்த திருக்கோவ லூரிலிருந்து நடுநாட்டிலுள்ள மற்றொரு திவ்ய தேசமான திருவகீந்திரபுரத்திற்குச் செல்லப் போகிறோம்.

**பார்த்தன் :** கண்ணா! இந்த இரண்டு திவ்யதேசங்கள் மட்டும் நடுநாடு என்கிறாயே! அது என்ன?

**கண்ணன் :** இதுவரை நாம் சேவித்த தொண்டை நாட்டிற்கும், இனி நாம் சேவிக்கப் போகும் சோழ நாட்டிற்கும் நடுவில் அமைந்துள்ள படியால் இவை இரண்டும் நடுநாடு எனப்படுகின்றன.

T.A.பாஷ்யம்

**பார்த்தன் :** இத்திருவகீந்திரபுரம் எங்குள்ளது?

**கண்ணன் :** இந்த திவ்ய தேசம் கடலூரிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது. ரயில் அல்லது பஸ் மூலமாகக் கடலூரை அடைந்து அங்கிருந்து டவுன் பஸ் மூலமாகத் திருவகீந்திர புரத்தை அடையலாம். நாம் பஸ் மூலமாகவே செல்வோம்.

**பார்த்தன் :** இத்தலத்தின் முக்யமான சிறப்பு என்ன?

**கண்ணன் :** வேதாந்த தேசிகர் மிகமிக உகந்த தலம் இது. அது மட்டுமல்லாமல் இத்தலத்திலேயே பல வருடங்கள் வாழ்ந்திருந்து பற்பல அற்புதங்களையும் நிகழ்த்தியிருக்கிறார்.

**பார்த்தன் :** ஆமாம், ஆமாம் நானும் புரட்டாசி இதழில் இது பற்றிப் படித்தேன். இதோ, இதுதான் திருவகீந்திரபுரமா?

கண்ணன் : ஆம். இங்கே ஸன்னிதியின் பின்புறம் கடிலம் எனப்படும் கருடநதி ஓடுகிறது அதில் தீர்த்தமாடி விட்டு கோயிலுக்குள் செல்வோம்.

பார்த்தன் : இத்தல வரலாறு என்ன?

கண்ணன் : புராணத்தின் படி பிரமன் இங்கே தவம் புரிந்து எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்ததால் இம்மலைக்கு பிரம்மாசலம் என்றும், அநுமன் சஞ்சீவி மலையைத் தூக்கிச் சென்றபோது அதில் சிறிது சிதறி விழுந்து அதுவே இங்கு மலையாக இருக்கிற படியால் ஔஷதாசலம் என்றும் கூறப்படுகிறது.

பார்த்தன் : இத்தலத்திற்கு திருவஹீந்திரபுரம் என்று பெயர்வரக்காரணம்?

கண்ணன் : அஹி என்ற வடமொழிச் சொல்லுக்கு பாம்பு என்று பொருள். அஹீந்திரனான ஆதிசேஷனே இம்மலையாக வடிவெடுத்திருக்கிற படியால் இம்மலைக்குத் திருவஹீந்திரபுரமென்று பெயர். இனி நாம் கோயிலுக்குள் செல்வோம். துவஜஸ்தம்பத்திற்கு அருகில் ஸேவித்து விட்டு பிரதக்ஷிணமாய் வரும்போது இதோ ஸேவையாகிறதே இதுதான் தாயார்ஸன்னிதி. ஹேமாப்ஜநாயகி, பார்க்கவி, அம்புருவாஹினி, தரங்கமுகநந்தினி, செங்கமலவல்லி, என்று பல பெயர்களாலும் போற்றப்படும் தாயார் இவரே! இப்படியே பிரதக்ஷிணமாய் பிரகாரத்திலுள்ள ராமர்ஸன்னதி, ராஜகோபாலன் ஸன்னிதி, ஆண்டாள் ஸன்னிதி முதலிய ஸன்னிதிகளை ஸேவித்து விட்டு தேசிகர் ஸன்னிதிக்குள் புகுவோம்.

பார்த்தன் : ஆஹா! எவ்வளவு அழகான திருமேனியோடு வேதாந்த தேசிகர் எழுந்தருளியுள்ளார்! இவ்வளவு அழகாக நான் எங்குமே ஸேவித்ததில்லையே கண்ணா!

கண்ணன் : ஆம்! எல்லாக்கலைகளிலும் வல்லவர் (ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்) என்ற பட்டத்துடன் இங்கு தேசிகர்

வாழ்ந்து வந்தபோது அவருடைய சிற்பக்கலையிலுள்ள திறமையை ஒரு சிற்பிவினவ, தம்மைப் போலவே அதிஅற்புதமான அழகான விக்ரகத்தைச் செய்து காட்டினார். அந்த அழகிய விக்ரகமே இங்கு வேதாந்த தேசிகராய் எழுந்தருளியிருப்பது அதேபோல் தேசிகரே வெட்டிய கிணறு ஒன்றும் இக்கோயிலுக்குள் இருக்கிறது. இனிநாம் பிரதான ஸன்னதியான பெருமாள் ஸன்னிதிக்குச் செல்வோம்.

**பார்த்தன் :** கண்ணா, இந்த எம்பெருமான் திருநாமம் என்ன? மங்களாசாஸனம் செய்துள்ள ஆழ்வார்கள் யாவர்!

**கண்ணன் :** எம்பெருமான் திருநாமம் தேவநாதன் என்பது. தேவாசுரயுத்தத்தின் போது தேவர்களுக்குத் துணையாய் நின்றமையால் இப்பெயர். மூலவர் முக்கண்ணனாய் எழுந்தருளியிருக்கிறார். சுத்த ஸத்வவிமானத்தின் கீழ் கிழக்கே திருமுக மண்டலத்துடன், சதுர் புஜனாய், நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறான் எம்பெருமான். திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி மூன்றாம்பத்து முதல் திருவாய்மொழியில் 10 பாசுரங்களால் இவ்வெம்பெருமானை மங்களாசாஸனம் செய்துள்ளார். இவ்வெம்பெருமானுக்கு வைகானஸ ஆகமப்படி திருவாராதனம் நடைபெறுகிறது. இனிநாம் கோயிலுக்கு வெளியே வருவோம்.

**பார்த்தன் :** கோயில் நுழைவாயிலுக்கு நேரே மலையும் படிக்கட்டுகளும் தெரிகின்றனவே! கோயிலுக்குள் புகும் போது இதை நான் கவனிக்கவேயில்லையே!

**கண்ணன் :** இதுதான் ஔஷதமலை. இதற்கு அழகிய படிக்கட்டுக்களை விட்டோ ஸ்தாபனத்தார் அமைத்துள்ளனர். வேதங்களை அபகரித்துச் சென்ற அசுரர்களைக் கொன்று வேதத்தை மீட்டு மீண்டும் பிரமனிடம் அளித்த ஹயக்ரீவர் இம்மலை மீது எழுந்தருளியுள்ளார். கருடன் மூலமாகப் பெற்ற ஹயக்ரீவ மந்திரத்தின் மூலம் வேதாந்ததேசிகர்

ஹயக்ரீவனை ஸாக்ஷாத்கரித்த இடம் இதுவே. இங்கே ஹயக்ரீவர் சதுர்புஜனுய், பிராட்டியை ஒரு திருக்கையால் அணைத்தும், மறுதிருக்கையால் அபயமளித்துக் கொண்டும் சங்கசக்ர தரனுய் எழுந்தருளியிருக்கிருர். ஒருபுறம் வேணு கோபாலன், பின்புறம் கருடன், மற்ருெருபுறம் நரஸிம்ஹன் ஆகியோரும் ஸேவை ஸாதிக்கின்றனர். இனிநாம் கீழே இறங்கி கோவிலை திருவீதிப் பிரதக்ஷிணமாய் வருவோம்!

**பார்த்தன் :** இங்கே மணவாளமாமுனிகளுக்கு உத்ஸவங்கள் சிறப்பாய் நடப்பதாகக் கேள்விப்பட்டேனே! அவர் ஸன்னதி எங்குள்ளது?

**கண்ணன் :** திருவீதியிலேயே, கோயிலுக்கு மிக அருகிலுள்ளது. இச்சன்னிதி கோயிலுக்கு வெளியிலிருந்தாலும், முன்ெருருகாலத்தில் கோயிலைச் சேர்ந்ததாகவேயிருந்ததாம். இங்கே நாம் ஆனந்தமாக ஸேவிக்கும் மணவாளமாமுனிகளுடைய மாஸ, வருஷத் திருநக்ஷத்ர உத்ஸவங்கள் ஸன்னதியிலேயே விசேஷமாக நடைபெறுகின்றன விசேஷ திருவீதிப் புறப்பாடுகளும் உண்டு. இனிநாம் திரும்பலாமா!




15-11-80 அன்று திருவனந்தபுரம் அநந்த பத்மநாப ஸ்வாமிக்கு 'ஆராட்டு' உத்ஸவம் நடந்தது அன்று திருவனந்தபுரம் விமான நிலையத்தில் விமானம் செல்லும் பாதை (ரன்வே) வழியாக பெருமாள் புறப்பாடு நடக்க இருப்பதால் விமானம் புறப்படும் நேரங்கள் புறப்பாடு முடியும்வரை ஒத்தி வைக்கப்படுகின்றன

—இந்தியன் எக்ஸ்ப்ரஸ் 14-11-80

★ ★

இவ்வருடம் சென்னை நகரில் மட்டும் சுமார் 65 இடங்களில் திருப்பாவை உபந்யாசங்கள் நடைபெறுகின்றன

★ ★

பள்ளிகள் கல்லூரிகளில் சமயக் கல்வி போதிப்பது மதசார்பற்ற தன்மைக்கு முரணானது அல்ல என்றும், தன்னுடைய சமயத்தையே மதிக்காத ஒருவன் மற்ற சமயங்களையும் மதிக்க மாட்டான் என்றும் மத்திய கல்வி அமைச்சர் திருப்பதியில் பேசி இருக்கிறார்.

—இந்தியன் எக்ஸ்ப்ரஸ 24-11-80

குமுதம் 6-11-80 இதழில் 'எந்த வைஷ்ணவராவது நான் 108 வைணவத் திருப்பதிகளையும் நேரில் தரிசித்துவிட்டு வந்திருக்கிறேன் என்று சொன்னால் நம்பாதீர்கள். அவரால் 107 திருப்பதிகளைத்தான் தரிசித்துவிட்டு வந்திருக்க முடியும் ஏன் என்றால் வைணவ சம்ப்ரதாயப்படி 108வது திருப்பதி என்பது பரமபதம்!' என்று ஒருவர் எழுதியிருக்கிறார் - இதுவும் தவறு. வைணவ சம்ப்ரதாயப்படி 107வது திருப்பதி திருப்பாற்கடல் அதையும் நம்மால் சேவிக்க முடியாது எனவே இவ்வுலகத்தவர்களால் 106 திருப்பதிகளைமட்டுமே தரிக்க முடியும்

★ ★

குருவாயூர்க் கோயிலில் பல வருஷகாலம் கைங்கர்யம் செய்து வந்த புகழ்பெற்ற கேசவன் என்ற யானைக்கு சுமார் 30 லட்சம் ரூபாயில் சிலை வைக்கப் போகிறார்கள்.

சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்டதாக கூறப்படும் புஷ்பயாகம் திருமலையில் 15-11-80 அன்று நடத்தப்பட்டது. உலகத்தின் நன்மைக்காகவும், பஞ்சம், புயல் போன்ற இயற்கைக் கொடுமைகளைத் தடுப்பதற்காகவும் செய்யப்பட்ட இப்புஷ்யாகத்தின்போது ஸ்ரீனிவாசருக்குப் பலவித புஷ்பங்களாலும் அர்ச்சனை செய்யப்பட்டது. சில காலமாகத் தண்ணீர்க் கஷ்டத்திலிருந்த திருமலையில் இந்த யாகத்திற்கு பிறகு இரண்டுமுறை மழை பெய்துள்ளது.

—இந்து, 17-11-80

★ ★

கடந்த 48 வருடகாலமாக சென்னையில் திருப்பாவை உபந்யாசம் செய்துவருகிறார் ஸ்ரீ உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி. இதுவரை 56 முறை திருப்பாவை உபந்யாசம் செய்திருப்பவரும் இவர் ஒருவரே.

ஏழைகளும் பகவானை உகந்து பூஜிக்கும் காலம் இது.

சென்ற மாதம் சிக்மகளூரில் வாழ்ந்து வந்த ஒரு ஏழைக்குடும்பத்தினர் ஒரு வேளை பட்டினி கிடந்து சுமார் ஒரு லட்ச ரூபாய் செலவில் காசுமாலை செய்து திருமலை ஸ்ரீனிவாசனுக்கு ஸமர்ப்பித்ததாக 'இந்து' நாளிதழில் செய்தி வந்தது.

குருவாயூரில் கடந்த 45 வருடகாலமாக வாழ்ந்துவரும் ஸ்ரீதேவியம்மா (வயது 70) என்பவர் பல குடும்பங்களில் வேலைக்காரியாக அமர்ந்து, ஒவ்வொரு பைசாவாகச் சேர்த்து குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயத்தில் 'உதயாஸ்தமன பூஜை'க்குப் பணம் கட்டியுள்ளார். இதற்காகும் செலவு ரூ 6,400/-

—தினமணி, 25-11-80

★ ★

இம்மாதிரியான (ஸ்ரீ வைஷ்ணஸம்ப்ரதாயம் ஸம்பந்தப்பட்ட) சுவையான துணுக்குகளை வாசகர்களும் அனுப்பலாம்.

# கண்ணன் கதைகள்

## தீபம். நா. பார்த்தசாரதி

### 5. கண்ணன் பிறந்தான்

ஆவணி மாதம் வந்தது. தேவகியின் திருவயிறு அசைந்தது. கருநிறைவு பெற்று வெளியேறி மண்ணில் பிறக்கும் நேரத்தை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. திருவிழாவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஊர் போல் மண்ணுலகம் எங்கும் ஆவல் ததும்பிக் கொண்டிருந்தது. உயிரினங்களின் உள்ளத்தில் எல்லாம் ஓர் இன்பச் சிலிப்பு,— அன்புப் பெருக்குப் பொங்கிப் பெருகி வளர்ந்தது. அந்த நல்ல நேரத்தில் கோள்கள் ஒன்பதும் நன்னிமித்தத்தில் நின்றன. கந்தருவ இசை மாதர்கள் கானமழை பொழிந்தனர், நடன மாதர் களிப்பு மிகுதியால் இன்பக் கூத்தாடினர். அன்று ரோகிணி நட்சத்திரம். உலகத்தின் எண்ணென் திசைகளிலும் அமைதி மயமானதொரு மங்கலப்பொலிவு நிறைந்திருந்தது. தேவகியின் வயிற்றில் வலியும் வேதனையும் அதிகமாயின.

பூமியைப் புனிதமாக்கப் போகும் புண்ணியத் திருச்செல்வன் பிறந்தான். செவிகளில் குண்டலங்கள், கைகளில் கடகங்கள், விரல்களில் ஒளிமயமான மோதிரங்கள், கருநீல மணி போன்ற கவர்ச்சிகரமான நிறம். பிறந்தவன் குழந்தையாகவா இருந்தான்? அகில புவனங்களையும் அடக்கியாளும் பரம சௌந்தரியம் தேவகிக்குப் பக்கத்தில் பிஞ்சுக் கை கால்களை உதைத்துக் கொண்டுகிடந்தது.

குழந்தையைக் கொஞ்சி உச்சிமோந்து குலாவவேண்டுமென்று பெற்றவர்களுக்குத் தோன்றவில்லை. கையெடுத்துக்

கும்பிட வேண்டுமென்றுதான் தோன்றியது. அப்படி ஒரு பயபக்தியை அந்தக் குழந்தையின் தோற்றம் அவர்களுக்கு உண்டாக்கிற்று.

ஒரு கணம் தேவகிக்கும் வசுதேவருக்கும் கண்கள் கூசின. வெறும் குழந்தை அவர்களுக்கு முன்பு தெரியவில்லை. அடி முடியற்ற பேரொளிப் பிழம்பு ஒன்று உருப்பெற்று ஆகாயத்துக்கும் பூமிக்குமாக அவர்கள் கண்முன் தோன்றியது. மெய் சிலிர்த்து உரோம புளகமெய்திக் கை குவிந்து வணங்கினர் அவர்கள். மணியோசை போன்ற கனிவுடைய குரல்— நெஞ்சை, உணர்வை, உடலை, ஐம் புலன்களையும், கனிந்துருகச் செய்யும் குரல் அந்தப் பேரொளிப் பிழம்பிலிருந்து உருத் தெரியா விதத்தில், உருத்தெரியா இடத்திலிருந்து எழுந்தது. "நான் பிறந்திருக்கிறேன்! என்னைக் கோகுலத்தில் நந்த கோபன் இல்லத்தில் யசோதைக்கு அருகில் கொண்டுபோய் விட்டுவிட்டு அங்கிருக்கும் குழந்தையை உடனே இங்கே எடுத்துக்கொண்டு வந்து மாற்றிவை" என்ற ஆணை பிறந்தது.

"பேரொளியே! தெய்வப் பிறப்பே! ஆரமுதே! யாங்கள் செய்த அருந்தவப்பயனால் எங்கள் வீட்டிலும் எல்லையற்றப் பேருலகிலும் இன்ப துன்ப விளையாட்டு புரிவதற்கு வந்து பிறந்திருக்கிறாய், அது எங்கள் பாக்கியம். நீ வழி நடத்த நடந்து செல்கிறவர்கள் நாங்கள். எல்லோரையும் பிறப்பிக்கும் நீயே பிறக்க ஆசைப்பட்டுப் பிறந்து வந்திருக்கிறாய். விண்ணில் விளையாடி உனக்கு அலுத்துவிட்டது போலும்! மண்ணில் விளையாட வந்திருக்கிறாய் வா! வா! உன் வரவைப் போற்றுகிறோம். உன் புகழை ஏற்றுகிறோம். உன் விருப்பங்களை, உன் ஆணைகளை நிறைவேற்றுகிறோம்" என்று மனம் நெகிழ்ந்து கூறினார் வசுதேவர்.

அதே நல்ல நேரத்தில் கோகுலத்தில் நந்தகோபர் மனைவியின் யசோதைக்கு மகளாக மாயாதேவி வந்து பிறந்திருந்தாள். "குழந்தை பிறந்ததும் இப்படி இவ்வளவு அழகாகச்

சிரிக்கிறதே''—என்று ரோஹிணி அதைப் பார்த்துத் தனக்குள் பெருமைப்பட்டுக்கொண்டாள். குழந்தை எதை நினைத்துச் சிரித்ததென்று அவள் கண்டளா, என்ன? தான் புரியப் போகிற திருவிளையாடலை எண்ணி அது சிரித்துக்கொண்டிருந்தது. தான் இடம் மாறவேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதை எண்ணி அது சிரித்துகொண்டிருந்தது. அதே சமயத்தில் தேவகியின் பக்கத்திலிருந்த குழந்தையை அழகானதொரு கூடையில் மெத்தெனப் பட்டுத் துணி விரித்து அதில் எடுத்து விட்டுக்கொண்டு கோகுலத்திற்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார் வசுதேவர். கம்சன் சிறைப் பகுதிக்குக் கடுமையான காவலர்களைப் போட்டிருந்தான். தேவகியையும், வசுதேவரையும் ஒவ்வொரு கணமும் விட்டுப் போகாமல் கண்காணிக்க வேண்டுமென்பது கம்சன் அந்தக் காவலாளிகளுக்கு இட்டிருந்த உத்தரவு. ஆனால் என்ன ஆச்சரியம்? அந்தத் தெய்விகக் குழந்தையை அவர் எடுத்துச் செல்லும்போது கட்டுக் காவல்கள், சட்ட திட்டங்கள் எவையும் பயன்படவில்லை. குழந்தையின் தெய்விக ஆற்றலினாலோ என்னவோ காவலாளிகள் பார்த்துக்கொண்டே ஒன்றும் செய்யத் தோன்ருமல் மயங்கியிருந்தனர். அடைக்கப் பட்டிருந்த கதவுகள் தாமாகத் திறந்து வழிவிட்டிருந்தன. பெரிய இரும்புக் கதவுகளின் பூட்டுக்களெல்லாம் பூவிதழ்கள் விரிவதுபோல் திறந்து கீழே விழுகின்றன.

வசுதேவர் உலகைக் காத்துத் திருவிளையாடல் புரியப் போகும் மாயக் குழந்தையைச் சுமந்து கொண்டு கோகுலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். குழந்தையின் ஒளி பட்டுப் புனிதமடைந்த வானத்து மேகங்கள் மழை பொழிந்து வாழ்த்துக் கூறின. குழந்தை நனைந்து விடாமலிருப்பதற்காக ஆதிசேடன் எண்ணற்ற படமுடிகளடங்கிய தன் பெருந் தலையை விரித்து வசுதேவருக்கு மேல் குடை பிடித்துக் கொண்டுபோனன். வசுதேவர் யமுனைக் கரையை அடைந்தார். ஆற்றைக் கடந்து அக்கரையிலுள்ள கோகுலத்துக்குப் போக வேண்டும்.

யமுனையாறு ஊழிப் பிரவாகம் போலப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. 'ஐயோ! நான் குழந்தையையும் எடுத்துக் கொண்டு எப்படி ஆற்றைக் கடந்து போவேன்?' என்று இக்கரையில் நின்று கொண்டு கதறினார் வசுதேவர். என்ன விந்தை! அவருடைய அலறல் அடங்கிய மறுகணமே யமுனை நீர்ப்பெருக்கின் நடுவே பிளவு ஏற்பட்டு வழி உண்டா யிற்று. வசுதேவர் ஆற்றில் இறங்கி நடந்தார். இருபுறமும் சுவர்போல நீரெழும்பி நின்றது. நடுவில் ஒரு துன்பமுமின்றிச் சுகமாக நடந்து குழந்தையோடு மறுகரையை அடைந்தார் வசுதேவர்.

கோகுலத்தில் நந்தகோபருடைய இல்லத்தில் அவர் நுழையும்போது பணிப்பெண்களெல்லாம் இனிய தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். மாளிகையே அமைதியில் ஆழ்ந்து கிடந்து. எவருக்கும் எங்கும் எந்த இடையூறும், இருக்கக் கூடாதென்று முன்கூட்டியே திட்டமிட்டு ஏற்பாடு செய்தது போலிருந்தது அந்த அமைதி. வசுதேவர் யசோதை படுத்திருந்த அறைக்குள் நுழைந்தார். யசோதை கட்டிலில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவளருகே இறைவனின் ஆணையால் குழந்தையாக வந்து பிறந்திருந்த மாயை சிரித்தவாறே கை கால்களை ஆட்டிக்கொண்டிருந்தாள். கண் இமைக்கும் நேரத்தில் வசுதேவர் கருதிவந்த காரியம் முடிந்து விட்டது. கூடையில் வைத்து அவர் கொண்டு வந்திருந்த குழந்தையைத் தூங்கிக் கொண்டிருந்தவளின் பக்கத்தில் கட்டிலில் எடுத்து விட்டார். அங்கேயிருந்த மாயையின் சின்னமாகிய பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு, வந்த சுவடு தெரியாமல் திருப்பி நடந்தார். யமுனை முன்போல் மீண்டும் விலகி வழி கொடுத்தது. தேவகி ஆழ்ந்த நித்திரையிலிருந்தாள். வசு தேவர் தாம் கொண்டுபோன யோகமாயையாகிய குழந்தை யைத் தேவகியின் அருகில் வைத்தார். பின்பு சிறிது நேரம் கழித்துத் தமக்கு ஒன்றும் தெரியாததுபோல் பேசாமல் அங்கிருந்து அகன்றார். விளையாட வந்த மாயை சும்மா யிருப்பாளா? விளையாட்டைத் தொடங்கினாள். தான் வந்து

பிறந்திருப்பதை மெல்ல அறிவிக்கின்றவள்போல வீறிட்டு அழுதாள். குழந்தையின் அந்த அழுகைக் குரல் அரண்மனை எங்கும் எதிரொலித்தது. காவலாளிகள் விழித்துக் கொண்டனர் கம்சனுடைய கட்டளை அவர்களுக்கு நினைவு வந்தது.

"குழந்தை பிறந்தால்; குழந்தை பிறந்து அழுகிற ஒலி கேட்டால் உடனே ஓடிவந்து எனக்குத் தெரிவியுங்கள்" என்று கம்சன் அவர்களுக்குச் சொல்லியிருந்தான். காவலாளிகள் கம்சனிடம் ஓடோடிச் சென்றனர். "அறைக்குள்ளிருந்து குழந்தை அழும் ஒலி கேட்கிறது. உங்களிடம் தெரிவித்துவிட வேண்டுமென்று உடனே வந்தோம்"—காவலர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டுக் கம்சன் கொதித்தெழுந்தான். ஆவேசத்தோடு உடைவாளை உருவிக்கொண்டு கிளம்பிவிட்டான். "முதலில் அந்தக் குழந்தையைத் தொலைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்"—அவன் வாயிலிருந்து இடி முழக்கம் போல் இச்சொற்கள் பிறந்தன. (தொடரும்)


# Oceanlink

Shipchandlers-shipservice engineers & Exporters

★

**254 THAMBU CHETTY ST.**
**MADRAS-1**

Phone : 31348

# பூபி நாச்சியார்

ஆண்டவன் தன் பக்தர்களை ஏற்றுக் கொள்ளும்போது ஜாதி மதம் என்ற பேதங்களைக் காட்டமாட்டான். அவன் உண்மையான பக்தியைத்தான் விரும்புகிறான். இதற்கு பூபீ நாச்சியார் எடுத்துக் காட்டாக விளங்கினார்.

மைசூரில் மேல்கோட் என்று அழைக்கப்படும் திரு நாராயணபுரக் கோவிலில் இந்த பெயர்கொண்ட தாயாருக்கு தனியாக ஒரு சன்னிதி இருக்கிறது.

---

M. O. கமலா ஸ்ரீனிவாசன்

---

ஒரு சமயம் டில்லி பாதுஷா தெற்கில் இருக்கும் எல்லா முக்கிய கோவில்களையும் சூறையாடி, அங்கிருக்கும் மூர்த்திகள் நகைகள் எல்லாவற்றையும் டில்லிக்குக் கொண்டுபோய் பத்திரப்படுத்தினான். அவைகளில் திருநாராயணன் கோவிலிலிருந்த அழகிய ''ராமப்பிரியன்'' என்று அழைக்கப்படும் உற்சவ மூர்த்தியும் ஒன்று. அந்த அழகிய விக்ரகத்தைப் பார்த்த பாதுஷாவின் மகள் 'வரநந்தினி' தான் விளையாட அந்தப்புரத்தில் வைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அவனிடம் மிகுந்த ஈடுபாடு. அப்பொழுது ஸ்ரீராமானுஜர் மேல்கோட்டையில் 12 வருடங்கள் தங்கவேண்டியதாயிற்று. இவருடைய பக்தி, வாதத் திறமையினால் நிறைய சிஷ்யர்கள் இருந்தார்கள். இராமானுஜர் இந்த திருநாராயணன் கோவிலை ஜீர்ணோதாரணம் செய்யவேண்டும் என்று நினைத்த போது உற்சவமூர்த்தி கனவில் தோன்றி தான் டில்லி பாதுஷாவின் அரண்மனையின் அந்தப்புரத்தில் இருப்பதாகவும், தன்னை அழைத்துக்கொண்டு போகுமாறும் கட்டளையிட்டார். உடனே இராமானுஜர் தன் சிஷ்யர்களுடன் டில்லிக்கு பயணமானார். இவர் நேராக டில்லி பாதுஷாவின் அரண்மனைக்கு சென்றபோது, ஏற்கனவே இவருடைய புகழைப் பற்றி கேள்விப்பட்டிருந்தமையால், பாதுஷா இவரை மிகுந்த மரியாதைகளுடன் உபசரித்து, வந்த காரணத்தையும் கேட்டார். அதற்கு ஸ்வாமி, விக்ரகத்தை திருப்பிக் கொடுக்கும்படி

கேட்டார். பாதுஷா "என்னிடம் நிறைய விக்ரகங்கள் இருப்பதினால் எது உங்களுக்கு தேவையானதோ எனக்கு தெரியாது. ஆகவே நீங்களே எனது உக்ராணத்தில் போய் தேடியெடுத்து கொள்ளுங்கள்" என்று சொல்லவே, சுவாமி, "அங்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவன் இருக்குமிடம் உன் பெண்ணின் அந்தப்புரம்" என்றார். பாதுஷா அதிசயித்து "எங்கள் அந்தப்புரம் கோஷாவாயிற்றே; நீங்கள் அங்கு செல்லமுடியாதே" என்றான். அதற்கு சுவாமி "நான் உள்ளே செல்லவில்லை, இங்கிருந்தே கூப்பிடுகிறேன்" என்றார். பாதுஷா "நீர் கூப்பிட்டால் விக்ரகம் எழுந்து நடந்து வருமா?" என்று சற்று ஏளனமாக கேட்கவே, இராமானுஜர் "ஏன் வரமாட்டான்?" என்று கூறிவிட்டு, பக்தியுடன் தியானித்து உரக்க, "ராமப்ரியா, செல்லப்பிள்ளையே ஓடிவா" என்று மூன்று தரம் அழைத்தார். என்ன அதிசயம்! விக்ரகம் அந்தப்புரத்திலிருந்து சின்ன குழந்தை எப்படி நடந்து வருமோ அதைபோல் நடந்து வந்து ஸ்ரீ இராமானுஜர் மடியில் அமர்ந்தது. இவர் வாத்சல்யத்துடன் "செல்லப்பிள்ளையே! சம்பத்குமாரா! எங்களை விட்டு நீ எங்கு சென்றிருந்தாய்?" என்று தலையை அன்புடன் தடவிக் கொடுத்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பாதுஷா பயந்து ஆச்சரியத்துடன் இவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். விக்ரகத்துடன் நகைகளையும், கோவில் கட்டுவதற்கான பணத்தையும் இவருக்குக் கொடுத்து வழி அனுப்பி வைத்தார்.

தன் விக்ரகத்தைவிட்டு தன்னால் ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது என்று அடம் பிடித்த வரநந்தினியும் ராமானுஜரைப் பின்தொடர்ந்து மேல் கோட்டைக்கு சென்று ராமப்பிரியனை ஆராதித்துக் கொண்டிருந்து அவனிடமே ஐக்கியமாகி விட்டாள். இன்றும் திருநாராயணபுரத்தில் இவளுக்குத் தனியாகச் சன்னிதி இருக்கிறது. இவள் கோஷாவானதால் திருநாராயணன் சன்னிதிக்கு வருவதற்கென்று ஒரு தனி வழியும் இருக்கிறது. இந்த சன்னிதிக்கு தினமும் ஆராதனை உண்டு. இவள் முஸ்லீம் பெண்ணானதால் பூபி நாச்சியார் என்று அழைக்கப்படுகிறார்.